අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) - විභාගය, 2025 (පෙරහුරු ප්‍රශ්න පත්‍රය)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025 (பயிற்சி வினாத்தாள்)
General Certificate of Education (Adv. Level) Examination, 2025 (Practice Paper)
Ministry of Education, Higher Education and Vocational Education

ගිණුම්කරණය I
கணக்கீடு I
Accounting I

33 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

அறிவுறுத்தல்கள் :

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* **1** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிந்தெடுத்து, **அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**
* **31** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக் குரிய சுருக்கமான விடையைப் **புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**
* ஒவ்வொரு வினாவுக்கும் **சமனான** புள்ளிகள் உரித்தாகும்
* உங்கள் **சுட்டெண்ணை** மேலே கொடுக்கப் பட்டுள்ள உரிய கூட்டினுள் தெளிவாக எழுதுக.
* **செய்நிரலாக்கத்தக்கா (Non-Programmable) கணிப்பான்கள் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும்.**

1. கீழ்காட்டப்பட்டுள்ள கூற்றுக்களில், நிறுவனத்தின் கணக்கீட்டின் பிரதான நோக்கத்தை மிகத் தெளிவாக விளக்குவது,
   (1) நிறுவனத்துக்கு நிதி வழங்கியோருக்கான பொது நோக்க நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்.
   (2) நிதியாண்டு காலப்பகுதிக்குள் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களை அறிக்கைப்படுத்தல்.
   (3) அக்கறையுடைய பகுதியினருக்குத் தீர்மானம் எடுப்பதற்குத் தேவையான பொருளாதாரத் தகவல்களை வழங்குதல்.
   (4) நிறுவனம் தொடர்பான பல்வேறு தீர்மானம் எடுப்பதற்காக முகாமைக்குத் தேவையான தகவல்களை வழங்குதல்.
   (5) கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல். (……)

2. வியாபாரத்தின் இருப்பு பெறுமதியிடல் முறையினை முதல் உள் முதல் வெளி (FIFO) முறையில் இருந்து நிறையிடப்பட்ட சராசரி முறைக்கு (WAC) மாற்றப்பட்ட போது மீறப்பட்ட கணக்கீட்டு எண்ணக்கருவானது,
   (1) வரலாற்றுக் கிரயம் (2) வெளிப்படுத்தல் (3) இணைதல்
   (4) கொள்கை மாறாமை (5) தொடர்ந்தியங்கும் (……)

3. கணக்கீட்டு எண்ணக்கருவின் பிரயோகம் தொடர்பான கீழ்வரும் கூற்று / கூற்றுக்களில் சரியானது,
   A - கிரயம் மற்றும் தேறிய தேறத்தக்க பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதியில் இருப்பினை மதிப்பிடுவது பாதுகாப்பு எண்ணக்கருவிற்கு அமைவானது,
   B - தேறல் எண்ணக்கருவிற்கு அமைய நிறுவனத்தின் ஒப்பந்த கடமைகள் அதன் பொறுப்பாக அடையாளம் காணப்படும்.
   C - கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோரை அடையாளம் காண்பதற்கான அடிப்படையை வழங்குவது தேறல் எண்ணக்கருவாகும்.
   (1) A மட்டும் (2) B மட்டும் (3) A மற்றும் B மட்டும்
   (4) A மற்றும் C மட்டும் (5) B மற்றும் C மட்டும் (……)

• **4 - 7 வரையான வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**
01.01.2025 அன்று மனோஜ் ரூ. 1 000 000 மூலதனத்துடன் மரத் தளபாட விற்பனை நிலையம் ஒன்றை ஆரம்பித்தார். இந்த வியாபாரம் பெறுமதி சேர் வரி (VAT) இற்காகப் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும். 2025 ஜனவரி மாதகாலத்தில் கீழ்வரும் கொடுக்கல்வாங்கல்கள் இடம் பெற்றுள்ளன.

இல.	**கொடுக்கல்வாங்கல்கள்**
1.	பட்டியலிடப்பட்ட விலை ரூ. 500 000 ஆன மரத்தளபாடங்கள் 10% வியாபாரக் கழிவு கழித்த பின் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டது. (இதற்கு 18% ஆன VAT உரித்தாகும்)

2. ரூ. 120 000 கிரயமான மரத்தளபாடங்கள் ரூ. 177 000 இற்கு காசுக்கு விற்கப்பட்டது. (இதில் ரூ. 27 000 VAT அடங்கியுள்ளது)

3. ரூ. 200 000 கிரயமான மரத்தளபாடங்கள் ரூ. 295 000 இற்கு சுதனுக்குக் கடனுக்கு விற்பனை (இதில் ரூ. 45 000 VAT அடங்கியுள்ளது)

4. சுதனுக்கு கடனுக்கு விற்கப்பட்ட தளபாடங்களில் அரைவாசி (50%) பழுதடைந்திருந்தமையால் அவரால் திருப்பி அனுப்பப்பட்டன.

4. மேற்காட்டப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை இலக்க ஒழுங்கில் ஏடுகளில் பதிவு செய்யும் போது பயன்படுத்தப்படும் மூலஏடுகளின் ஒழுங்கு,

(1) காசுக்கொடுப்பனவு நாளேடு, காசுப்பெறுவனவு நாளேடு, விற்பனை நாளேடு, உட்திரும்பல் நாளேடு

(2) கொள்வனவு நாளேடு, காசுப் பெறுவனவு நாளேடு, கொள்வனவு நாளேடு, உட்திரும்பல் நாளேடு

(3) கொள்வனவு நாளேடு, காசுப் பெறுவனவு நாளேடு, விற்பனை நாளேடு, உட்திரும்பல் நாளேடு

(4) கொள்வனவு நாளேடு, பொது நாளேடு, விற்பனை நாளேடு, உட்திரும்பல் நாளேடு

(5) பொது நாளேடு, விற்பனை நாளேடு, விற்பனை நாளேடு, உட்திரும்பல் நாளேடு (……)

5. இல. 1, 2, 3 ஆகிய கொடுக்கல்வாங்கல்களின் தேறிய விளைவைச் சரியாகக் காட்டும் கணக்கீட்டு சமன்பாடானது,

	சொத்துக்கள் (ரூ. '000)	= உரிமையாண்மை (ரூ. '000)	+ பொறுப்புக்கள் (ரூ. '000)	
(1)	635.8	55	580.5	
(2)	635.8	80	558.8	
(3)	683	161	522	
(4)	683	80	603	
(5)	742	80	662	(……)

6. கொடுக்கல்வாங்கல் இல. 1 இனை பேரேட்டில் பதியும் போதான சரியான இரட்டைப் பதிவானது,

	விபரம்	வரவு (ரூ. '000)	செலவு (ரூ. '000)	
(1)	கொள்வனவுக் க/கு	450		
	VAT கட்டுப்பாட்டுக் க/கு	81		
	கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் க/கு		531	
(2)	கொள்வனவுக் க/கு	531		
	கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் க/கு		531	
(3)	கொள்வனவுக் க/கு	500		
	VAT கட்டுப்பாட்டுக் க/கு	81		
	கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் க/கு		581	
(4)	கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் க/கு	450		
	VAT கட்டுப்பாட்டுக் க/கு	81		
	கொள்வனவுக் கட்டுப்பாட்டுக் க/கு		531	
(5)	கொள்வனவுக் க/கு	450		
	VAT கட்டுப்பாட்டுக் க/கு	81		
	காசுக் க/கு		531	(……)

7. மனோஜின் வியாபாரத்தில் 31.01.2025 திகதியில் VAT கட்டுப்பாட்டு கணக்கின் மீதி மற்றும் தேறிய இலாபத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பவற்றைச் சரியாகக் காட்டும் விடையானது,

	VAT கட்டுப்பாட்டு கணக்கின் மீதி (ரூ. '000)	**தேறிய இலாபம் (ரூ. '000)**
(1)	0.9 வரவு	80
(2)	13.5 செலவு	80
(3)	13.5 செலவு	25
(4)	31.5 வரவு	80
(5)	31.5 வரவு	55

(……)

8. அகிலன் வியாபாரத்தில் 31.03.2025 இல் முடிவடையும் வருடத்துக்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரித்ததன் பின்னர் கீழ்வரும் வழுக்கள் கண்டறியப்பட்டன.

- காசுப் பெறுவனவு நாளேட்டில் கொடுத்த கழிவு நிரலின் கூட்டுத்தொகை பெறுமதியானது ரூ. 360 000 பேரேட்டுக் கணக்கில் ரூ. 630 000 எனக் காட்டப்பட்டுள்ளது.
- ரூ. 85 000 விற்பனைப் பட்டியலானது புத்தகங்களிலிருந்து தவறவிடப்பட்டிருந்தது.
- 31.03.2025 இல் முடிவடையும் வருடத்துடன் தொடர்புடைய இறைவரிக் கட்டணம் ரூ. 108 000 இல் செலுத்திய 50% மட்டும் இறைவரிக் கணக்கில் பதியப்பட்டிருந்தது.

மேற்காட்டப்பட்ட வழுக்கள் திருத்தப்பட்டதன் பின்னர் வியாபாரத்தின் தேறிய இலாபத்திலான அதிகரிப்பானது **(ரூ. '000** களில்),

(1) 131 (2) 239 (3) 247
(4) 301 (5) 391 (……)

9. சுவி ஆடை உற்பத்தித் தொழிற்சாலையை நடாத்திச் செல்லும் தனியுடமை முயற்சியாளராவார். அவரின் வியாபாரத்தின் ஊழியர் சேமலாப நிதி (EPF)க்கான தொழிலாளர்களின் பங்களிப்பு 10% ஆகவும் நிறுவனத்தின் பங்களிப்பு 15% உம் ஆகும். ஊழியர் நம்பிக்கை நிதிய (ETF) பங்களிப்பு 3% ஆகும். வியாபாரம் ஒவ்வொரு மாதத்துக்குமான EPF மற்றும் ETF தொடர்பான தொகைகளை எதிர்வரும் மாதத்தின் 10 ஆம் திகதி செலுத்துகின்றது.

31.03.2025 இல் முடிவடையும் மாதத்திற்கு இவ்வியாபாரத்தினால் செலுத்திய தேறிய சம்பளமானது ரூ. 2 650 000 ஆகும். இந்த தேறிய சம்பளம் கணக்கிடப்படும் போது நலன்புரிச்சங்கத் தொகையான ரூ. 50 000 மற்றும் ஊழியர் சேமலாபநிதிப் பங்களிப்பு என்பன கழிக்கப்பட்டுள்ளது. 31.03.2025 இல் முடிவடையும் மாதத்துக்கான ஊழியர் சம்பளம் தொடர்பான **மொத்தச் செலவு** மற்றும் **செலுத்த வேண்டிய EPF** பொறுப்பு எவ்வளவு?

	மொத்தச் செலவு (ரூ. '000)	**செலுத்த வேண்டிய EPF பெறுமானம் (ரூ. '000)**
(1)	2 700	750
(2)	3 180	780
(3)	3 450	450
(4)	3 540	750
(5)	3 590	300

(……)

10. தேவனி முறையாக கணக்கறிக்கைகளைப் பேணாது வியாபாரத்தை நடாத்திச் செல்கிறார். கீழ்வரும் தகவல்கள் 31.03.2025 இல் முடிவடையும் வருடத்துக்காக உமக்குத் தரப்பட்டுள்ளன.

	ரூ. '000 களில்		**ரூ. '000** களில்
01.04.2024 இல் இருப்பு	250	விற்பனைகள்	2 600
வெளித்திருப்பம்	60	கொண்டுவரும் கூலி	50
31.03.2025 இல் இருப்பு	160		

இந்த நிறுவனம் கிரயத்தில் 25% இலாப எல்லையுடன் பொருட்களை விற்பனை செய்கிறது.
31.03.2025 இல் முடிவடையும் வருடத்துக்கான கொள்வனவுப் பெறுமதி எவ்வளவு? **(ரூ. '000** களில்)

(1) 1 750 (2) 1 870 (3) 1 950
(4) 2 000 (5) 2 100 (……)

11. 31.03.2025 இல் முடிவடையும் வருடத்துக்கான சனூன் உற்பத்தி வியாபாரத்தின் கணக்கு புத்தகங்களில் இருந்து கீழ்வரும் தகவல்கள் பெயர்த்தெடுக்கப்பட்டன.

	ரூ. '000 களில்
மூலப்பொருள் இருப்பில் அதிகரிப்பு	200
மூலப்பொருள் கொள்வனவு	1 500
மூலப்பொருள் கொண்டுவரும் கூலி	100
குறைவேலை இருப்பிலான குறைவு	20
நேர் கூலிக்கிரயம்	400
ஏனைய நேர் செலவுகள்	200
உற்பத்தி மேந்தலைக் கிரயம்	1 180

- மொத்த உற்பத்தி கிரயத்தின் அடிப்படையில் முடிவுப்பொருள் இருப்பு பெறுமதியிடப்படுகிறது.

31.03.2025 இல் முடிவடையும் வருடத்துக்கான **மூலக்கிரயம்** மற்றும் **உற்பத்திக் கிரயம்** என்பன,

	மூலக்கிரயம் (ரூ. '000)	**மொத்த உற்பத்திக் கிரயம் (ரூ. '000)**
(1)	1 800	3 200
(2)	2 000	3 200
(3)	2 000	3 160
(4)	2 400	3 600
(5)	2 400	3 560

(……)

12. ஆதிப் என்பவரின் வியாபாரத்தில் 31.03.2025 திகதிக்காகத் தயாரிக்கப்பட்ட பரீட்சைமீதி சமப்படாததால் வித்தியாசம் தொங்கல் கணக்கில் காட்டப்பட்டுள்ளது. அதற்கமைய கணிக்கப்பட்ட தேறிய இலாபம் ரூ. 275 000 ஆகும். பின்னர் மேற்கொள்ளப்பட்ட கணக்கு பரிசீலனையின் போது கீழ்வரும் காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

1. ரூ. 20 000 ஆன வரவுத்தாள் புத்தகங்களில் பதியப்படவில்லை
2. ரூ. 25 000 ஆன மின்கட்டணம் செலுத்தியது காசுக் கணக்கில் சரியாகப் பதியப்பட்ட போதும் மின்கட்டண கணக்கில் ரூ. 20 500 எனப் பதியப்பட்டுள்ளது.
3. கடன்பட்டோரிடம் பெற்ற ரூ. 15 000 ஆன காசு, காசுக்கணக்கில் மாத்திரம் பதியப்பட்டுள்ளது.
4. இறைவரிக் கட்டணம் செலுத்தியது ரூ. 10 000 தொடர்புடைய கணக்குகள் இரண்டிலும் வரவில் பதியப்பட்டு உள்ளது.

31.03.2025 இல் முடிவடையும் வருடத்தின் சரியான **தேறிய இலாபம்** மற்றும் **சீராக்க முன்னரான தொங்கல் கணக்கின்** மீதியானது,

	தேறிய இலாபம் (ரூ. '000)	**தொங்கல் கணக்கின் மீதி (ரூ. '000)**
(1)	279.5	39.5 செலவு
(2)	280.5	30.5 வரவு
(3)	280.5	20.5 செலவு
(4)	290.5	50.5 வரவு
(5)	290.5	30.5 செலவு

(……)

13. திசரி விளையாட்டுச் சங்கம் 01.01.2023 அன்று ஆரம்பிக்கப்பட்ட அன்றைய தினமே 20 அங்கத்தவர்கள் ஆயுள் அங்கத்துவப் பணமாக ஒருவருக்கு ரூ. 25 000 படி செலுத்தி இருந்ததுடன் வருடத்திற்கு ரூ. 1 200 செலுத்தி 100 அங்கத்தவர்கள் அங்கத்துவத்தைப் பெற்றனர்.

- ஆயுள் அங்கத்துவப் பணம் 10 வருடங்களில் வருமானமாகக் காட்டப்பட வேண்டும்.
- 31.12.2023 அன்று மேலும் 10 அங்கத்தவர்கள் சங்கத்தில் இணைந்ததுடன் ஆரம்ப அங்கத்தவர்களில் 20 பேர் அன்றைய தினம் சங்கத்திலிருந்து விலகினர்.

அங்கத்துவப் பணம்	**01.01.2024 அன்று**	**31.12.2024 அன்று**
அட்டுறு அங்கத்துவப் பணம்	12 000	24 000
முற்பண அங்கத்துவப் பணம்	18 000	36 000

மேற்காட்டப்பட்ட தகவல்களுக்கமைய 31.12.2024 திகதியில் முடிவடையும் வருடத்துக்கான **மொத்த அங்கத்துவப்பண வருமானம்** மற்றும் **காசாகக் கிடைத்த அங்கத்துவப்பணம்** என்பன,

	மொத்த அங்கத்துவப்பண வருமானம் (ரூ. '000)	காசாகப் பெற்ற அங்கத்துவப் பணம் (ரூ. '000)
(1)	108	138
(2)	158	114
(3)	500	500
(4)	608	156
(5)	658	614

(……)

14. 1890 இன் பங்குடமை கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவுக்கமைய சரியான கூற்றினைக் காட்டும் விடையானது,

A - பங்குடமை வியாபாரத்தின் இலாப நட்டம் பங்காளரால் இடப்பட்ட மூலதன விகிதத்தில் பகிரப்பட வேண்டும்.

B - மூலதனத்திற்கு மேலதிகமாக பங்காளரால் வழங்கப்படும் கடன்களுக்காக 5% வட்டி வழங்கப்பட வேண்டும்.

C - முகாமையில் பங்குபற்றும் பங்காளர்களுக்கு சம்பளம் பெறும் உரிமையில்லை.

D - பங்குடமை வியாபாரத்தின் செலவினை பங்காளர் தனது சொந்தப் பணத்தில் செலவிடுவது கணக்குகளில் காட்டப்படத் தேவையில்லை.

(1) A மற்றும் B மட்டும் (2) B மற்றும் C மட்டும் (3) B மற்றும் D மட்டும்
(4) A, B மற்றும் C மட்டும் (5) B, C மற்றும் D மட்டும் (……)

- **15, 16 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

திசாந்தி மற்றும் மேகலா என்போரால் நடாத்திச் செல்லப்படும் பங்குடமை வியாபாரத்தின் பங்குடமை ஒப்பந்தம் கீழே காட்டப்பட்டுள்ளது.

1. திசாந்தி மற்றும் மேகலா இற்கு இடையிலான இலாப நட்ட விகிதம் 3 **:** 2 ஆகும்.
2. சகல பங்காளர்களுக்கும் மாதத்துக்கு ரூ. 20 000 பங்காளர் சம்பளம் உரித்தாகும்.
3. ஆரம்ப மூலதன மீதிக்கு 5% வருடாந்த வட்டி உரித்தாகும்.

01.04.2024 இல் உரிமையாண்மை கீழே காட்டப்பட்டுள்ளது,

	திசாந்தி	**மேகலா**
நடைமுறைக் க/கு **(ரூ. '000)**	200	(100)
மொத்த உரிமையாண்மை **(ரூ. '000)**	3 200	1 900

- வருடகாலத்தில் திசாந்தி ரூ. 250 000 காசினைப் பற்றுச் செய்துள்ளதுடன் மேகலா ரூ. 300 000 ஆன பொருட்களைச் சொந்தப் பாவனைக்காகப் பெற்றுக் கொண்டுள்ளார். இவை தொடர்பாக புத்தகங்களில் பதிவுகள் மேற்கொள்ளப்படவில்லை.
- திசாந்தி மூலதனத்திற்கு மேலதிகமாக 01.07.2024 அன்று ரூ. 400 000 ஆன கடன் தொகையை பங்குடமை வியாபாரத்திற்கு வழங்கியுள்ளார். இதற்கான வட்டி ஏடுகளில் பதியப்படவோ செலுத்தப்படவோ இல்லை.
- 31.03.2025 அன்று சரண் என்பவர் இலாப நட்டத்தில் $^1/_6$ பங்கினைப் பெற்றுக்கொள்ளும் உடன்பாட்டுடன் பங்குடமை வியாபாரத்திற்கு ரூ. 2 500 000 இனை மூலதனமாக இடுவதற்கு இணங்கிக் கொண்டார். அன்றைய தினத்தில் பங்குடமையின் நன்மதிப்பு ரூ. 300 000 ஆக மதிப்பிடப்பட்டதுடன் மூலதனக் கணக்கினூடாகச் சீராக்கத் தீர்மானிக்கப்பட்டது.
- 31.03.2025 இல் முடிவடையும் வருடத்துக்கான தேறிய இலாபம் ரூ. 1 045 000 ஆகும்.

15. 31.03.2025 திகதியில் திசாந்தியின் நடைமுறைக் கணக்கின் மீதியானது (**ரூ. '000** களில்)

(1) 700 (2) 715 (3) 722
(4) 725 (5) 1 100 (……)

16. 31.03.2025 திகதியில் மேகலாவின் மூலதனக் கணக்கின் மீதியானது (**ரூ. '000** களில்)

(1) 1 900 (2) 1 920 (3) 2 000
(4) 2 020 (5) 2 050 (……)

17. ‘LKAS 1 நிதி அறிக்கைப்படுத்தல் எண்ணக்கருச் சட்டகம்’ இன்படி எந்தக் கூற்று / கூற்றுக்கள் சரியானதாகும்.

A - நிதி வருடத்தில் கூறப்பட்ட மூலதனத்தில் வித்தியாசம் ஏற்பட்டால் மாத்திரமே உரிமையாண்மை மாற்றல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும்.

B - நிதியாண்டில் அறிக்கையிடப்பட்டுள்ள சகல உருப்படிகள் தொடர்பாகவும் குறைந்தது கடந்த ஆண்டுக்கான ஒப்பிடக்கூடிய தகவல்களாவது (Comparative information) வழங்கப்பட வேண்டும்.

C - நிறுவனமொன்றினால் அதன் சகல நிதிக்கூற்றுக்களும் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்-பட வேண்டும்.

(1) A மட்டும் (2) B மட்டும் (3) C மட்டும்

(4) A மற்றும் C மட்டும் (5) B மற்றும் C மட்டும் (……)

18. மரத்திலான பொருட்களை உற்பத்தி செய்யும் கம்பனிக்கு 2025 மார்ச் மாதத்தில் கிடைத்த கட்டளைக்கமைய உற்பத்தி செய்யப்பட்ட 100 புத்தக ராக்கைகளுக்கான உற்பத்திக் கிரயம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

விபரம்	**(ரூ. ‘000)**
மூலப்பொருள் கொள்வனவு …………… …………..	1 500
நேர் கூலி ……………………………………………	300
மூலப்பொருள் கொண்டுவரும் கூலி ...………………..	100
வெள்ளம் காரணமாக சேதமடைந்த மூலப்பொருட்கள்	200
100 புத்தக ராக்கைகளுக்கான மேந்தலைக் கிரயம்	600

மேலும் இவ்வாடிக்கையாளரின் விசேட தேவைக்கமைய இந்த புத்தக ராக்கைகளை வடிவமைப்பது தொடர்பாக வெளியக வடிவமைப்பாளருக்கு ரூ. 50 000 காசாகச் செலுத்தப்பட்டது. இக்கட்டளையை கம்பனிக்குப் பெற்றுத்தந்த தரகருக்கு ரூ. 75 000 தரகுப்பணம் காசாகச் செலுத்தப்பட்டுள்ளது.

31 மார்ச் 2025 திகதியாகும் போது 100 புத்தக ராக்கைகளினதும் உற்பத்தி செயற்பாடு பூர்த்தி அடைந்துள்ளதுடன், வாடிக்கையாளருக்கு இந்தக்கட்டளையை வினியோகிப்பதற்காக உறுதி அளிக்கப்பட்ட திகதியானது 10 ஏப்ரல் 2025 ஆகும். 31 மார்ச் 2025 திகதியில் மிகுதி மூலப்பொருள் இருப்பு எதுவும் காணப்படவில்லை எனக் கொள்க.

31.03.2025 திகதியில் இக்கம்பனியின் மொத்த உற்பத்திக் கிரயமானது,

(1) ரூ. 2 350 000 (2) ரூ. 2 425 000 (3) ரூ. 2 700 000

(4) ரூ. 2 750 000 (5) ரூ. 2 850 000 (……)

19. ‘LKAS 7 காசுப்பாய்ச்சல் கூற்று’ இன்படி கீழ்வரும் எந்த உருப்படி நிதிச் செயற்பாட்டு நடவடிக்கைக்குள் உள்ளடங்கும் காசுப்பாய்ச்சலாக வகைப்படுத்தக்கூடியது,

A - செலுத்திய இடைக்கால பங்குலாபம்

B - ஏனைய கம்பனிகளில் சாதாரண பங்குகள் கொள்வனவு செய்வதற்காகக் கொடுத்த காசு

C - வங்கிக்கடன் மூலமாக கம்பனிக்குக் கிடைத்த காசு

D - வங்கியொன்றில் நிலையான வைப்பு ஆரம்பிப்பதற்காக வழங்கிய காசு

(1) A மற்றும் B மட்டும் (2) A மற்றும் C மட்டும் (3) B மற்றும் D மட்டும்

(4) C மற்றும் D மட்டும் (5) B மற்றும் C மட்டும் (……)

20. 31.03.2025 திகதியில் முடிவடையும் வருடம் தொடர்பாக வரையறுக்கப்பட்ட ஹீரோ கம்பனியின் நிதிக்கூற்றுக்களுக்கு 02.06.2025 அன்று இயக்குனர் சபையால் அனுமதியளிக்கப்பட்டது.
மேலும் இந்த கம்பனியுடன் தொடர்புடைய கீழ்வரும் தகவல்கள் உமக்குத் தரப்பட்டுள்ளன.

- 05.04.2025 திகதியன்று கம்பனியில் ரூ. 200 000 ஆன பொருட்களைக் கடனுக்கு கொள்வனவு செய்த கடன்பட்டவர் தன்னை வலுவிழந்தவர் என 10.05.2025 அன்று பிரகடனப்படுத்தினார்.
- 30.04.2025 இல் சூறாவளி காரணமாக ரூ. 250 000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரம் முழுமையாகச் சேதமடைந்தது. 31.03.2025 திகதியில் இந்த இயந்திரத்தின் தேறிய பெறுமதி ரூ. 200 000 ஆகும்.

- 01.03.2025 அன்று ரூ. 600 000 இற்கு விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் அதன் நியம தரத்தில் காணப்பட்ட குறைபாடு காரணமாக 15.04.2025 அன்று வாடிக்கையாளரால் திருப்பி அனுப்பப்பட்டது. இந்த விற்பனை விலையில் உள்ளடங்கிய இலாப எல்லை (Profit margin) ரூ. 75 000 ஆகும்.

மேற்காட்டப்பட்ட நிகழ்வுகளைச் சீராக்குவதற்கு முன் 31.03.2025 திகதியில் முடிவடையும் வருடத்துக்கான இலாபம் ரூ. 1 500 000 ஆகும்.

'LKAS 10 அறிக்கையிடும் காலத்துக்குப் பிந்திய நிகழ்வுகள்' இன்படி சீராக்கம் மேற்கொள்ளப்பட்ட பின்னர் 31.03.2025 முடிவடையும் வருடத்துக்கான சரியான இலாபம் எவ்வளவு?

(1) ரூ. 650 000 (2) ரூ. 900 000 (3) ரூ. 1 100 000
(4) ரூ. 1 425 000 (5) ரூ. 1 500 000 (……)

21. வரையறுக்கப்பட்ட கமல் கம்பனி அச்சிடும் இயந்திரத்தை 01.10.2024 திகதியில் வாடிக்கையாளர் ஒருவருக்கு விற்பனை செய்தது. கமல் கம்பனி அச்சிடும் இயந்திரத்தின் விற்பனைத் திகதி முதல் அடுத்த 2 வருடங்களுக்கு 6 மாதத்துக்கொருமுறைப்படி 4 தடவைகள் முழுமையான பராமரிப்பு சேவை வழங்குவதாக உடன்பட்டுக் கொண்டது. இதற்காக மொத்த காசாக ரூ. 600 000 இனை அறவிடுவதற்கு கம்பனியும் வாடிக்கையாளரும் உடன்பாட்டுக்கு வந்தனர்.

வரையறுத்த கமல் கம்பனியால் இவ்வருடத்திலேயே அச்சிடும் இயந்திரத்தின் பராமரிப்பு சேவை இன்றிய கொடுக்கல்வாங்கலாயின் இவ்இயந்திரத்தை ரூ. 450 000 இற்கு விற்பனை செய்வதுடன் இயந்திரத்தின் பராமரிப்பு சேவைக்கான கொடுக்கல்வாங்கலுக்காக ஒரு தடவைக்கு ரூ. 37 500 காசாக அறவிடப்படும்.

31.03.2025 ஆம் திகதியாகும் போது கமல் கம்பனி இந்த வாடிக்கையாளருக்கு முதலாவது பராமரிப்பு சேவையினைப் பூர்த்தி செய்துள்ளது.

'SLFRS 15 வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்' இன்படி வரையறுத்த கமல் கம்பனி 31.03.2025 இல் முடிவடையும் வருடத்துக்காக இந்த ஒப்பந்தத்தில் அங்கிகரிக்கப்பட வேண்டிய வருமானமானது,

(1) ரூ. 406 250 (2) ரூ. 450 000 (3) ரூ. 487 500
(4) ரூ. 525 000 (5) ரூ. 600 000 (……)

22. வரையறுத்த சலீம் பொதுக் கம்பனி 05 வருடங்களுக்கு மோட்டார் வாகனத்தைப் பாவிக்கும் உரிமையைப் பெற்றுக் கொள்வதற்காக 31.03.2025 அன்று குத்தகை ஒப்பந்தத்திற்கு உடன்பட்டனர். அதற்காக அத்திகதியிலேயே ரூ. 2 000 000 உடன் காசுக் கொடுப்பனவை மேற்கொண்டது. மேலும் குத்தகை ஒப்பந்தத்திற்கு அமைய வருடாந்த குத்தகைத் தவணைக் கட்டணமாக ரூ. 110 000 படியான 05 வருடகால வரையறைக்குச் செலுத்த வேண்டியிருந்ததுடன் முதலாவது தவணைக் கட்டணம் 31.03.2026 திகதியில் செலுத்த வேண்டியுள்ளது. இந்த ஒப்பந்தத்துடன் தொடர்புடைய வட்டி வீதம் 10% ஆவதுடன் கணிக்கப்பட்ட ஒப்பந்தத்துக்கு அமைவான மொத்த வட்டி ரூ. 133 013 ஆகவும் முதலாவது வருடத்துக்கான வட்டி ரூ. 41 699 உம் ஆகும்.

'SLFRS 16 குத்தகைகள்' இன்படி 31.03.2025 திகதியில் நிதிநிலைமைக்கூற்றில் நடைமுறையல்லாப் பொறுப்பாகக் காட்டப்பட வேண்டிய குத்தகைப் பெறுப்பானது,

(1) ரூ. 348 686 (2) ரூ. 416 987 (3) ரூ. 447 000
(4) ரூ. 550 000 (5) ரூ. 2 440 000 (……)

23. வரையறுத்த சசினி பொதுக் கம்பனியின் புத்தகங்களில் 31.03.2024 மற்றும் 31.03.2025 திகதிகளில் கீழ்வரும் தகவல்கள் பெயர்தெடுக்கப்பட்டுள்ளன.

	2025.03.31 (ரூ. '000)	**2024.03.31 (ரூ. '000)**
கூறப்பட்ட சாதாரணப்பங்கு மூலதனம் ………………….	12 500	10 000
நிறுத்திவைத்த வருவாய் ……………………………….	6 500	6 000
ஆதனம் பொறி மற்றும் உபகரணம் (கிரயத்தில்) ……..	25 000	20 000
ஆதனம் பொறி மற்றும் உபகரணம் (திரண்ட தேய்வு) .	2 500	2 000
சரக்கிருப்பு ……………………………………………….	1 500	1 000

வியாபார வருமதிகள்	…………………………………	2 000	3 000
வியாபார சென்மதிகள்	………………………………..	2 000	1 500

1. 2024 / 2025 கணக்காண்டில் நிறுத்திவைத்த வருவாயைப் பயன்படுத்தி ரூ. 1 000 000 மூலதன-மாக்கல் மேற்கொள்ளப்பட்டது.
2. 01.04.2024 திகதியில் ரூ. 5 000 000 ஆன மோட்டார் வாகனம் கொள்வனவு செய்யப்பட்டமை தவிர ஆதனம் பொறி மற்றும் உபகரணம் தொடர்பாக வேறு சேர்ப்பனவுகள் இடம்பெறவில்லை.
3. 2024 / 2025 கணக்காண்டில் ரூ. 500 000 பங்குலாபம் செலுத்தப்பட்டதுடன் 31.03.2025 திகதியில் இயக்குனர் சபையால் ரூ. 60 000 பங்குலாபம் செலுத்துவதற்கு முன்மொழியப்பட்டது.
4. இக்கம்பனி வருமானவரி விலக்களிக்கப்பட்ட கம்பனியாகும்.

'LKAS 7 காசுப்பாய்ச்சல்கூற்று' இன்படி 31.03.2025 இல் முடிவடையும் வருடத்துக்கான செயற்பாட்டு நடவடிக்கைகளால் உருவான தேறிய காசுப்பாய்ச்சலானது,

(1) ரூ. 3 000 000 (2) ரூ. 3 500 000 (3) ரூ. 4 000 000
(4) ரூ. 4 500 000 (5) ரூ. 5 100 000 (……)

24. 01.04.2024 அன்று ஆரம்பிக்கப்பட்ட வரையறுத்த ஜயா பொதுக் கம்பனி 31.03.2025 திகதியில் முடிவடையும் வருடத்துக்கான நடைமுறை விகிதம் 2.5 : 1 ஆக இருந்ததுடன் திரவ விகிதம் 1.5 : 1 உம் ஆகும். இருப்பினும் மேலுள்ள விகிதம் கணிக்கப்படும் போது வியாபாரத்தின் இருப்புக்கள் இருமுறை கணக்கெடுக்கப்பட்டிருந்ததுடன் முற்பணமாகச் செலுத்திய ரூ. 30 000 இனை உள்ளடக்கு-வதில் இருந்து தவறவிடப்பட்டிருந்தது.
வியாபாரத்தின் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூ. 200 000 ஆயின் புதிய சரியான நடைமுறை விகிதமானது,

(1) 1.7 : 1 (2) 1.9 : 1 (3) 2 : 1
(4) 2.1 : 1 (5) 2.15 : 1 (……)

25. நிதி மற்றும் முகாமை கணக்கீட்டுடன் தொடர்புடைய கீழ்வரும் கூற்று / கூற்றுக்களில் எது சரியானது?
A - முகாமைக் கணக்கீடு கணக்கீட்டு நியமங்களுக்கு அமையத் தயாரிக்கப்படுகிறது.
B - நிதிக் கணக்கீட்டின் மூலமாக முகாமைக் கணக்கீட்டுக்கான தகவல்கள் வழங்கப்படுகின்றன.
C - முகாமைக் கணக்கீட்டினால் வரலாற்று மற்றும் எதிர்காலத் தகவல்கள் வழங்கப்படும்.
D - நிதிக் கணக்கீட்டின் மூலமாக முகாமைத்துவத்துக்குத் தேவையான போது தேவையான பகுப்பாய்வுத் தகவல்கள் வழங்கப்படுறன.

(1) A மட்டும் (2) A மற்றும் B மட்டும் (3) B மற்றும் C மட்டும்
(4) C மற்றும் D மட்டும் (5) A, B மற்றும் D மட்டும் (……)

26. சேனுகி கம்பனியின் P எனும் பெயருடைய பொருள் உற்பத்திக்கான மூலப்பொருளாகப் பெறப்பட்ட $\mathscr{X}$ எனும் பெயருடைய பொருள் தொடர்பாக புத்தகங்களிலிருந்து கீழ்வரும் தகவல்கள் பெயர்த்-தெடுக்கப்பட்டுள்ளன.
மாதமொன்றின் உற்பத்தி அலகுகள் 30 ஆகும்
P அலகொன்றின் உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருள் $\mathscr{X}$ இன் அளவு 10kg
கட்டளை அலகுகளின் எண்ணிக்கை 200 ஆகவும் கட்டளை ஒன்றின்கான கிரயம் ரூ. 100
அலகொன்றினை வருடாந்தம் வைத்திருப்பதற்கான கிரயம் ரூ. 2 ஆகும்
இம்மூலப்பொருளுக்கான பொருளாதார கட்டளைக் கணியம் (EOQ) மற்றும் கட்டளைகளின் எண்ணிக்கை என்பன முறையே,

(1) 173 அலகுகள், 6 தடவைகள் (2) 189 அலகுகள், 6 தடவைகள்
(3) 245 அலகுகள், 18 தடவைகள் (4) 600 அலககள், 6 தடவைகள்
(5) 610 அலகுகள், 18 தடவைகள் (……)

27. கீழே காட்டப்பட்டுள்ளவை வினுஷா இலத்திரனியல் பொருள் விற்பனை கம்பனியின் 2025 ஜுலை மாதத்துக்கான சம்பளப்பட்டியலிலிருந்து சுருக்கியெடுக்கப்பட்ட தகவல்களாகும்,

	(ரூ. '000)
அடிப்படைச் சம்பளம்	650
வேலதிக நேர வேலை	100

வருகைப் படிகள்	50	
மொத்த சம்பளம்		**800**
கழிப்பனவுகள்		
ஊழியர் கடன் தவணைப்பணம்	180	
EPF ஊழியர் பங்களிப்பு	70	
விடுதிக்கான வாடகை	50	(300)
தேறிய சம்பளம்		**500**

நிறுவனத்தின் அதிகார பூர்வ விடுதியை ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் 10 ஊழியர்கள் விடுதிகளில் குடியிருப்பதற்காக மாதத்திற்கு ரூ. 10 000 வாடகை அறவிடப்படும். ஊழியர்களின் சம்பளம் செலுத்த வேண்டியுள்ளது.

மேற்காட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் சம்பளத்தினைக் கணக்குகளில் காட்டுவதற்கான இரட்டைப் பதிவானது,

	விபரம்		**(ரூ. '000)**	**(ரூ. '000)**
(1)	சம்பளக் க/கு	வரவு	800	
	காசுக் க/கு	செலவு		800
(2)	சம்பளக் க/கு	வரவு	650	
	படிகள் க/கு	வரவு	150	
	ஊழியர் கடன் க/கு	செலவு		180
	அட்டுறு EPF க/கு	செலவு		70
	அட்டுறு விடுதி வாடகைக் க/கு	செலவு		50
	காசுக் க/கு	செலவு		500
(3)	சம்பளக் க/கு	வரவு	800	
	ஊழியர் கடன் க/கு	செலவு		180
	அட்டுறு EPF க/கு	செலவு		70
	விடுதி வாடகைக் க/கு	செலவு		50
	காசுக் க/கு	செலவு		500
(4)	சம்பளக் க/கு	வரவு	800	
	ஊழியர் கடன் க/கு	செலவு		180
	அட்டுறு EPF க/கு	செலவு		70
	விடுதி வாடகை வருமானக் க/கு	செலவு		50
	அட்டுறு சம்பளக் க/கு	செலவு		500
(5)	சம்பளக் க/கு	வரவு	800	
	ஊழியர் கடன் க/கு	செலவு		180
	அட்டுறு EPF க/கு	செலவு		70
	செலுத்த வேண்டிய விடுதி வாடகை செலவுக் க/கு	செலவு	50	
	அட்டுறு சம்பளக் க/கு	செலவு		500

(……)

28. ஒன்றிணைத்தல் மற்றும் பொருத்துதல் ஆகிய உற்பத்தித் திணைக்களங்கள் இரண்டுடன் நடாத்தப்படும் வரையறுத்த நிசாந்தி வியாபாரத்தின் 2024 மே மாதத்தில் உறிஞ்சப்பட்ட மொத்த மேந்தலைக் கிரயம் தொடர்பான தகவல்கள் கீழ்வருமாறு,

ஒன்றிணைத்தல் பிரிவு (இயந்திர மணித்தியால அடிப்படையில்) ரூ. 300 000
பொருத்துதல் பிரிவு (ஊழிய மணித்தியால அடிப்படையில்) ரூ. 512 000

அலகுக்கான கிரயம் தொடர்பான கீழ்வரும் தகவல்கள் உமக்கு வழங்கப்பட்டுள்ளன,

	பாதிடப்பட்டது	**உண்மை**
இயந்திர மணித்தியாலம்	5	5
ஊழிய மணித்தியாலம்	4	7

மே மாதத்தில் பாதிடப்பட்ட உற்பத்தி அலகுகள் 4 000 உம் உண்மையாக உற்பத்தி செய்யப்-பட்ட அலகுகள் 3 000 உம் ஆகும். அலகுக்கான மூலக்கிரயம் ரூ. 300 ஆயின் அலகொன்றின் மொத்தக் கிரயம் எவ்வளவு?

(1) ரூ. 299 (2) ரூ. 503 (3) ரூ. 599
(4) ரூ. 600 (5) ரூ. 1 571 (……)

29. வரையறுத்த சனுஸ் கம்பனி K எனும் பெயரில் தனிப் பொருளொன்றைத் தயாரித்து விற்பனை செய்வதுடன் தொடர்புடைய கீழ்வரும் தகவல்கள் உமக்குத் தரப்பட்டுள்ளன,

விற்பனை அலகுகள்	இலாபம் / நட்டம் (ரூ.)
500	(50 000)
1 200	20 000

- அலகொன்றின் விற்பனை விலை ரூ. 160 ஆகும்.

சமப்பட்டுப் புள்ளியில் அலகுகளின் எண்ணிக்கையானது,

(1) 100 அலகுகள் (2) 500 அலகுகள் (3) 700 அலகுகள்
(4) 1 000 அலகுகள் (5) 1 200 அலகுகள் (……)

30. வரையறுத்த ஜஸ்வினி கம்பனியின் நிதி முகாமையாளரால் ரூ. 180 000 இற்கு புதிய இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்புதிய இயந்திரத்தின் பயனுள்ள ஆயுட்காலம் 03 வருடங்களாகும்
இவ்வியந்திரத்துக்கு எஞ்சிய பெறுமதியில்லை
நேர்கோட்டு முறையில் இயந்திரத்திற்குப் பெறுமானத் தேய்வு செய்யப்படுகின்றது.

மேலதிக தகவல்கள்:

வருடம்	வருமான அதிகரிப்பு	பெறுமானத் தேய்வு நீங்கிய செலவீன அதிகரிப்பு
1	150 000	50 000
2	100 000	20 000
3	150 000	60 000

இந்த இயந்திரத்தின் கணக்கீட்டுத் திரும்பல் வீதமானது சாராசரி முதலீட்டின் அடிப்படையில்,

(1) 11.11% (2) 16.67% (3) 20%
(4) 22.22% (5) 33.33% (……)

- **31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

31. கீழ்வரும் இடைவெளிகளை நிரப்புக.

A - பொது நோக்க நிதிக்கூற்றுக்கள் மூலமாக தகவல் வழங்குவது, தற்போது இருக்கும் மற்றும் எதிர்பார்க்கும் முதலீட்டாளர்களுக்கு ……………..…………… மற்றும் ………………………… போன்றோருக்கும்.

B - பொது நோக்க நிதிக்கூற்றுக்கள் மூலமாக மேலுள்ள பயன்பெறுவோருக்கு, அறிக்கைப்படுத்தும் அலகுடன் தொடர்புடைய …………………………………… தொடர்பான தீர்மானம் எடுக்கத் தேவையான …………………………… தகவல்கள் வழங்கப்படும்.

32. தனி வியாபாரமொன்றின் கீழ்வரும் மீதிகள் மற்றும் கொடுக்கல்வாங்கள் உமக்கு வழங்கப்பட்டுள்ளன.

01.01.2024 இல் மீதி - விற்பனை முற்பணம் ரூ. 100 000
அட்டுறு மின்கட்டணம் ரூ. 50 000

கொடுக்கல்வாங்கல்

1. மேற்காட்டப்பட் விற்பனை முற்பணம் தொடர்பாக ரூ. 380 000 ஆன விற்பனை விலையுடைய பொருட்கள் வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்டு காசு பெறப்பட்டுள்ளது. (இந்த பொருட்களின் கிரயம் ரூ. 300 000 ஆகும்)
2. 31.03.2025 திகதியில் முடிவடையும் வருடத்துக்கான மின்சார செலவு ரூ. 175 000 ஆகவும் 31.03.2025 திகதியில் மின்கட்டணம் தொடர்பாக முற்பணம் அல்லது அட்டுறு எதுவும் காணப்படவில்லை.

மேற்காட்டப்பட்ட கொடுக்கல்வாங்கல் கீழுள்ள கணக்கீட்டு சமன்பாட்டில் தாக்கம் செலுத்தும் விதத்தைக் காட்டுக.

கொ.வா. இல.	பொறுப்புக்கள்		உரிமையாண்மை	
	அதிகரிக்கும் / குறையும்	பெறுமதி (ரூ.)	அதிகரிக்கும் / குறையும்	பெறுமதி (ரூ.)
1.				
2.				

- **33, 34 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**
வியாபாரத்தின் வியாபார வருமதிகள் தொடர்பாகப் பெயர்த்தெடுக்கப்பட்ட தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.
31.03.2025 திகதியில் வியாபார வருமதிகளின் பேரேடுகளின் கூட்டுத்தொகை ரூ. 880 000 ஆகும். அத்திகதியில் வியாபார வருமதிகள் கட்டுப்பாட்டு கணக்கின் மீதி வித்தியாசப்பட்டதுடன் தொடர்புடைய கீழ்வரும் தவறுகள் மற்றும் விடுபாடுகள் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.
(1) காசுப் பெறுவனவு நாளேட்டில் பதியப்பட்டிருந்த திலக்கின் கழிவு ரூ. 9 000 வருமதியாளர் பேரேட்டில் அவரின் கணக்கில் பதியப்படவில்லை.
(2) ரூ. 100 000 ஆன விற்பனைப் பட்டியல் தொடர்பாக எவ்வித பதிவுகளும் பதியப்படவில்லை.
(3) ரூ. 7 000 அறவிடமுடியாக்கடன் மீளப் பெறப்பட்டமை வியாபார வருமதிகள் கட்டுப்பாட்டு கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது.
(4) வருமதியாளர் பேரேட்டில் நந்தினியின் கணக்கின் செலவு மீதியான ரூ. 5 000 வரவு மீதியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

33. 31.03.2025 திகதியில் வியாபார வருமதிகள் கட்டுப்பாட்டு கணக்கின் சரியான மீதி எவ்வளவு?
ரூ. ....

34. மேற்காட்டப்பட்ட பிழைகள் திருத்தப்பட்ட பின் இலாபத்திலான விளைவு ‘‘அதிகரிக்குமா / குறையுமா’’ என தொகைகளுடன் காட்டுக.

ரூ. .... ஆல் .... (அதிகரிக்கும் / குறையும்)

35. கீழ்காட்டப்பட்டுள்ள உருப்படிகள் பதியப்படும் நிதிக்கூற்றுக்களின் கூறுகளைப் பெயரிடுக.

உருப்படிகள்	**கூறுகள்**
A - பெற வேண்டிய வருமானம்	....
B - செலுத்திய வருமான வரி	....
C - பொது ஒதுக்கத்துக்கு மாற்றுதல்	....
D - கட்டடம் முதல் தடவையாக மீள்மதிப்பீட்டின் குறை	....

36. உற்பத்தி வியாபாரமொன்றின் தகவல்கள் சில கிழே காட்டப்பட்டுள்ளன.

	(ரூ. ‘000)
01.04.2024 இல் மூலப்பொருள் இருப்பு	3 000
31.03.2025 இல் மூலப்பொருள் இருப்பு	3 500
காலப்பகுதியில் மூலப்பொருள் கொள்வனவு	15 000
உற்பத்தி மேந்தலைக் கிரயம்	13 000
நேர் கூலிக் கிரயம்	2 000

- மொத்த உற்பத்திக் கிரயத்தைக் கணக்கிடும் போது வெளித்திருப்பிய மூலப்பொருள் பெறுமதி யான ரூ. 500 000 மற்றும் தொழிற்சாலை இறைவரி ரூ. 600 000 கணக்கிலெடுக்கப்படவில்லை.
- ஆரம்ப மற்றும் இறுதி குறைவேலை இருப்புக்கள் எதுவும் காணப்படவில்லை.

மேற்காட்டப்பட்ட தகவல்களைக் கருத்திற் கொண்டு கீழ்வரும் கூற்றுக்கள் **உண்மை / பொய்** எனக் குறிப்பிடுக.

(1) பயன்படுத்தப்பட்ட மூலப்பொருள் கிரயம் ரூ. 14 000 000 ஆகும் ....

(2) மூலப்பொருள் கிரயம் ரூ. 15 500 000 ஆகும் ....

(3) உற்பத்தி மேந்தலைக் கிரயம் ரூ. 13 600 000 ஆகும். ....

(4) மொத்த உற்பத்திக் கிரயம் ரூ. 29 600 000 ஆகும். ....

37. உற்பத்தி வியாபாரமொன்றின் கீழ்வரும் சந்தர்ப்பங்களில் பிரயோகிக்கப்படும் கணக்கீட்டு எண்ணக்கருவைக் குறிப்பிடுக.

சந்தர்ப்பங்கள்	**எண்ணக்கரு**
A - இறுதி இருப்புக் கிரயம் மற்றும் தேறிய தேறத்தக்க பெறுமதி என்பவற்றில் குறைந்த பெறுமதியில் அறிக்கையிடல்	....
B - பயன்படுத்தப்பட்ட மூலப்பொருள் கிரய கணிப்பில் இறுதி மூலப்பொருள் இருப்பு நீக்கப்படும்	....
C - மூலப்பொருள் எடுப்பனவுப் பெறுமதி உரிமையாண்மையைக் குறைப்பதாகக் காட்டப்படுவது	....
D - இறுதியாக எஞ்சியுள்ள இருப்புக்களை வகைப்படுத்தி நிதிக்கூற்றுக் களில் வெளிப்படுத்தல்	....

38. 01.04.2022 அன்று ஆரம்பிக்கப்பட்ட நலன்புரிச் சங்கமொன்றின் இரண்டு ஆண்டுக்கான நிதிகள் தொடர்பான கீழ்வரும் தகவல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

	31.03.2025	**31.03.2024**
	(ரூ. '000)	**(ரூ. '000)**
ஆயுட்கால அங்கத்துவப் பணம்	3 000	3 000
புத்தகசாலைக் கட்டட நிதி	1 500	1 200

மேலதிக தகவல்கள்:

(1) சங்கம் ஆரம்பிக்கப்பட்ட திகதியில் கிடைத்த ஆயுட்கால அங்கத்துவப் பணம் 8 வருடங்களுக்கு வருமானமாக அடையாளம் காணப்படும்.

(2) 30.03.2025 அன்று ரூ. 1 400 000 செலவு செய்து புத்தகசாலைக் கட்டடம் முழுமையாக முடிக்கப்பட்டது. வருடகாலத்துள் புத்தசாலை கட்டட நிதிக்கு நன்கொடை கிடைத்துள்ளதுடன் புத்தகசாலை நிதியில் எந்தவொரு தொகையும் திரண்டநிதிக்கு மாற்றப்படவில்லை.

கீழ்வருவனவற்றைக் கணிக்க.

A. சங்கத்தின் ஆரம்ப திகதியில் கிடைத்த மொத்த ஆயுட்கால அங்கத்துவப் பணம் ரூ. ....

B. 31.03.2025 திகதியில் திரண்டநிதிக்கு மாற்ற வேண்டிய புத்தகசாலைக் கட்டட நிதியின் பெறுமதி ரூ. ....

- **39, 40 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

ஜமில், அரோஸ் மற்றும் முனீர் ஆகியோர் 3 : 2 : 1 என்ற விகிதத்தில் இலாப நட்டங்களைப் பகிரும் வகையில் நடாத்தப்படும் பங்குடமை வியாபாரத்தில் இருந்து 31.03.2025 அன்று அரோஸ் ஓய்வு பெற்றார். அன்றைய தினம் நன்மதிப்பு மூலதனக் கணக்கில் சீராக்கப்பட்டமையால் அரோசின் உரிமையாண்மை ரூ. 400 000 ஆல் அதிகரித்ததுடன் முனீரின் உரிமையாண்மை ரூ. 400 000 ஆல் குறைவடைந்தது. 31.03.2025 திகதியில் இருந்த அரோஸின் நடைமுறைக் கணக்கின் வரவு மீதியானது ரூ. 200 000 மூலதனக் கணக்கிற்கு மாற்றப்பட்டது. ஓய்வு பெற்ற தினத்தில் ரூ. 650 000 கொண்டு செல் பெறுமதியான உபகரணங்கள் ரூ. 600 000 பெறுமதியில் அரோஸிற்கு உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்டதுடன் மிகுதித் தொகை 10% வட்டியுடனான கடன் கணக்கிற்கு மாற்றப்பட்டது. 31.03.2025 திகதியில் ஜமில் மற்றும் முனீர் என்போரின் மூலதன மீதி தலா ரூ. 5 000 ஆகும்.

39. (அ) அரோஸ் ஓய்வு பெறும் திகதியில் மதிப்பிடப்பட்ட நன்மதிப்பின் மொத்த பெறுமதி எவ்வளவு?

ரூ. ………………………………..

(ஆ) 01.04.2024 திகதியில் அரோஸின் மூலதன கணக்கின் மீதி ரூ. 4 500 000 எனின் 31.03.2025 திகதியில் அரோஸின் கடன் கணக்கின் மீதி எவ்வளவு? ரூ. …………………….……………

40. (அ) 01.04.2024 திகதியில் ஜமிலின் மூலதனக் கணக்கின் மீதியானது ரூ. …………….. ஆகும்.

(ஆ) 01.04.2024 திகதியில் முனீரின் மூலதன மீதி ரூ. 4 000 000 எனின் முனீர் 31.03.2025 திகதியன்று ரூ. 500 000 இருப்பினை மேலதிக மூலதனமாக ஈடுபடுத்தினால் அத்திகதியில் அவர் காசாக ஈடுபடுத்திய மேலதிக மூலதனமானது ரூ. ……………………………………….…………...

41. நிதி அறிக்கைப்படுத்தலில் கணக்கீட்டு எண்ணக்கருச் சட்டகத்திற்கு (2018) அமைய கீழுள்ள இடைவெளிகளை நிரப்புக.

A. நிதித் தகவல்களின் இரண்டு அடிப்படைத் தரரீதியான பண்புகள் 'நம்பகத்தன்மை' மற்றும் …………………………. ஆகும்.

B. பொருளாதார பிரதிபயனைப் பெற்றுக்கொள்ளும் ஆற்றல் ………………………………….. என வரையறுக்கப்படுகிறது.

C. நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அடிப்படையாகப் பின்பற்றப்படும் எண்ணக்கரு ……………………………….……. ஆகும்.

D. நிதித் தகவல்களின் சிறப்பியல்பானது தீர்மானம் எடுக்கும் பகுதியினருக்கு தாமதமின்றி குறித்த காலத்தில் வழங்க வேண்டும் என வெளிப்படுத்துவது ……………………………………………

42. 'LKAS 8 கணக்கீட்டு கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றங்கள் மற்றும் வழுக்கள்' நியமத்துக்கு அமைய கீழ்வரும் ஒவ்வொரு சந்தர்ப்பமும் கணக்கீட்டு கொள்கை மாற்றமா? கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றமா? எனக் குறிப்பிடுக.

சந்தர்ப்பங்கள்	**கணக்கீட்டு கொள்கை / மதிப்பீட்டு மாற்றம்**
A. ஆதனம் பொறி மற்றும் உபகரணத்தின் பெறுமானமிடல் முறையினை கிரய முறையிலிருந்து மீள்மதிப்பீட்டு முறைக்கு மாற்றியமைத்தல்	……………………..
B. இருப்பின் கிரய மதிப்பீட்டு முறை முதல் உள் முதல் வெளி முறையில் இருந்து நிறையளிக்கப்பட்ட சராசரி முறைக்கு மாற்றுதல்	……………………..
C. பயனுள்ள ஆயுட்காலம் 05 வருடம் எனத்தீர்மானிக்கப்பட்டிருந்த இயந்திரத்தின் பயனுள்ள ஆயுட்காலத்தை 08 வருடங்களாக அதிகரிக்கும் தீர்மானம் மேற்கொள்ளப்படல்	……………………..
D. நேர்கோட்டு முறையில் பெறுமானத் தேய்விடப்பட்ட இயந்திரம் நடப்பு ஆண்டிலிருந்து ஒடுங்குமீதி முறையில் பெறுமானத் தேய்வைக் கணிக்கும் தீர்மானத்தை மேற்கொள்ளல்.	……………………..

43. வரையறுத்த மேகன் கம்பனி 01.01.2025 திகதி புதிய உற்பத்தி இயந்திரத்தைக் கொள்வனவு செய்ததுடன் அதனுடன் தொடர்புடைய விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

	ரூ.
இயந்திரத்தை விற்பனை செய்த நிறுவனத்திற்குச் செலுத்திய விலை (பட்டியல் இற்கமைய)	1 000 000
இயந்திரத்தைக் கம்பனிக்குக் கொண்டு வருவதற்கான கூலி	50 000
இயந்திரத்தை நிறுவுவதற்காக தொழிற்சாலைச் சூழலை தயார்படுத்தல் கிரயம் (Site preparation)	200 000

01.01.2025 திகதியில் தொடர்புடைய இயந்திரம் தொழிற்சாலையில் நிறுவுதல் நிறைவு பெறும் போது பாவனைக்குப் பொருத்தமான நிலையில் காணப்பட்ட போதும் மூலப்பொருள் வழங்கலில்

காணப்பட்ட தாமதம் காரணமாகப் புதிய இயந்திரத்தின் பாவனை ஆரம்பமானது 01.02.2025 இல் ஆகும். மேலும் இந்த இயந்திரத்தினை வழங்கிய நிறுவனத்தினால் இயந்திரம் தொடர்பாக 10 வருட உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ள போதிலும் மேகன் கம்பனியின் முகாமையால் இந்த இயந்திரம் எதிர்வரும் 5 வருட காலத்திற்கு மட்டும் உற்பத்தி செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்த முடியும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

'LKAS 16 ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்' இன்படி இப்புதிய இயந்திரத்துடன் தொடர்புடைய கீழ்வருவனவற்றைக் குறிப்பிடுக.

a. அடையாளம் காணப்பட்ட சந்தர்ப்பத்தில் இயந்திரத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூ. ....

b. பயனுள்ள ஆயுட்காலம் ....

c. 31.03.2025 திகதியில் முடிவடையும் வருடத்துக்கான இயந்திரத்தின் பெறுமானத் தேய்வு ரூ. ....

44. மென்பொருள் விருத்தி செய்யும் வரையறுத்த நீட் கம்பனி தமது வாடிக்கையாளருடன் கணக்கு-களைத் தயாரிப்பதற்கான மென்பொருள் (Accounting Software) மற்றும் சம்பள கணக்குகளைப் பேணும் மென்பொருள் (Payroll Software) விருத்தி செய்வதற்காக 01.01.2025 அன்று ஒப்பந்தம் ஒன்று எட்டப்பட்டது. இந்த ஒப்பந்தத்துடன் தொடர்படைய உடன்பாடுகள் மற்றும் இணங்கிக் கொண்ட பெறுமதி என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

கணக்குகளைத் தயாரிப்பதற்கான மென்பொருள்	**(ரூ.)**
மென்பொருள் தயாரிப்பதற்கான அனுமதிப்பத்திரம் பெறல் (Software development and licnce)	800 000
மென்பொருளை வாடிக்கையாளரின் கணினி அமைப்பில் நிறுவுதல் (Installation)	200 000
சம்பள கணக்குகளைப் பேணும் மென்பொருள்	
மென்பொருள் தயாரிப்பதற்கான அனுமதிப்பத்திரம் பெறல் (Software development and licence)	400 000
மென்பொருளை வாடிக்கையாளரின் கணினி அமைப்பில் நிறுவுதல் (Installation)	100 000

அதன்படி ஒப்பந்தத்தின் மொத்தத் தொகை ரூ. 1 500 000 ஆகும். மேலும் இந்த மென்பொருளை வாடிக்கையாளரின் கணினி அமைப்பில் நிறுவும் சந்தர்ப்பத்தில் அதனுடன் தொடர்புடைய (configuration and customization) சீராக்கல தேவைப்பாடு ஏற்படும் போது அதற்கான அதிகாரம் காணப்படுவது இம்மென்பொருளை விருத்தி செய்த நீட் கம்பனிக்கு மட்டுமாகும்.

31.03.2025 திகதியாகும் போது மென்பொருள் இரண்டையும் பூர்த்தி செய்வதற்கான அனுமதிப் பத்திரம் வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் அத்திகதியில் கணக்குகளைத் தயாரிப்பதற்கான மென்பொருள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டு நிறுவுதல் செய்யப்பட்டிருந்தது. இவ்ஒப்பந்தம் தொடர்பாக ரூ. 1 400 000 முற்பணம் கம்பனியால் 01.01.2025 அன்று வாடிக்கையாள-ரிடம் பெறப்பட்டிருந்தது.

'SLFRS 15 வாடிக்கையாளருடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்' இன்படி இந்த ஒப்பந்தம் தொடர்பாக கீழ்வருவனவற்றை அடையாளம் காண்க.

(அ) 31.03.2025 திகதியில் முடிவடையும் வருடத்துக்கான அடையாளம் காணப்பட்ட வருமானம் ....

(ஆ) 31.03.2025 திகதியில் உழைக்கப்படாத வருமானம் ....

45. வரையறுத்த சமன் கம்பனி பேக்கரி உணவுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் வியாபாரத்தினை நடாத்தி வருகின்றது.

'LKAS 37 ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புகள் மற்றும் நிகழத்தக்க சொத்துகள்' இன்படி கீழ்வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் 31.03.2025 திகதியில் அல்லது நிகழத்தக்க பொறுப்பு அல்லது நிகழத்தக்க சொத்து உருவாகின்றது என்பதைக் காரணத்துடன் குறிப்பிடுக.

A. இந்த கம்பனியால் விற்பனை செய்யப்படும் உணவு விசமடைந்தமை தொடர்பாக வாடிக்கையாளர் ஒருவர் நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளார். இந்த வழக்கு 2025 ஜுன் மாதத்தில் விசாரணைக்கு உட்பட உள்ளதுடன் கம்பனி வழக்கில் தோல்வியடையுமாயின் கணிசமானளவு நட்டஈட்டை வாடிக்கையாளருக்குச் செலுத்த வேண்டி வரும். எனினும் தீர்ப்பு வரும் வரை உறுதியாக எதுவும் கூறமுடியாது என கம்பனியின் வழக்கறிஞர் தெரிவித்தார்.

B. 2025 ஜனவரி மாதத்தில் கம்பனியின் பேக்கறிகளில் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக உணவு உற்பத்திக்காகப் பாவிக்கப்பட்ட போறணை முற்றாகச் சேதமடைந்ததுடன் இதற்காகக் கம்பனி தற்போது ரூ. 200 000 நட்டஈட்டினைக் காப்புறுதிக் கம்பனியிடம் கோரியுள்ளது. 31.02.2025 திகதியாகும் போது கம்பனியின் விண்ணப்பத்தைப் பரிசீலித்து வருவதாகவும் நட்டஈடு கிடைப்பதற்கான சாத்தியக்கூறு இருப்பதாகவும் அறியக்கூடியதாக உள்ளது.

	ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புகள் மற்றும் நிகழத்தக்க சொத்துகள்	காரணம்
A	....	....
B	....	....

46. கணக்கீட்டு விகிதப் பகுப்பாய்வு தொடர்பாக கீழ்வரும் கூற்று **உண்மையா / பொய்யா** எனக் காட்டுக.

1. கடனுக்கு விற்பனை காரணமாக நடைமுறை விகிதம் அதிகரிக்கும் ....
2. உயர்ந்த இருப்பு புரள்வு விகிதம் காரணமாக உயர்ந்த இருப்பு பேணும் காலம் காட்டப்படும் ....
3. கடன் உரிமை விகிதம் உயர்வடைதல் ஒரு சாதகமான நிதிலைமையாகும் ....
4. இறுதி இருப்பினைத் தேறிய தேறத்தக்க பெறுமதியில் காட்டப்படுவது தேறிய இலாப விகிதத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்தும். ....

47. உற்பத்தி கம்பனியின் $\mathscr{X}$ எனும் பொருளை தயாரிப்பதுடன் அது தொடர்பாக உற்பத்தி திணைக்களங்கள் இரண்டு மற்றும் ஒரு சேவைத் திணைக்களத்தைக் கொண்டு நடாத்திச் செல்கின்றது. அது தொடர்பாக கீழ்வரும் தகவல்கள் பெயர்த்தெடுக்கப்பட்டுள்ளன.

	உற்பத்தித் திணைக்களம்		சேவைத் திணைக்களம்
	ஒன்றிணைத்தல்	பொருத்துதல்	களஞ்சியம்
பாதிடப்பட்ட மேந்தலைக் கிரயம்	180 000	125 000	100 000
மூலப்பொருள் வேண்டுகோள் பத்திரம்	300	200	

மேந்தலைக் கிரயம் உறுஞ்சல் விகிதம் - இயந்திரம் மணித்தியாலத்திற்கு ரூ. 22.50
- ஊழிய மணித்தியாலத்திற்கு ரூ. 25

மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையின் போது மேந்தலைக்கிரயமானது முதலாம் கட்டப் பகிர்வு இடம் பெற்ற பின்பே கணிக்கப்பட்டது என்பது வெளிப்படுத்தப்பட்டது.

மேந்தலைக்கிரயமானது ஒன்றிணைத்தல் திணைக்களத்தில் இயந்திர மணித்தியாலய அடிப்படையிலும் பொருத்துதல் திணைக்களத்தில் ஊழிய மணித்தியாலய அடிப்படையிலும் உறிஞ்சப்படுகின்றது.

$\mathscr{X}$ பொருள் உற்பத்திக்காக 10 இயந்திர மணித்தியாலயங்களும், 05 ஊழிய மணித்தியாலங்களும் தேவைப்படுகின்றது.

கீழ்வருவனவற்றைக் காட்டுக.

1. ஒன்றிணைத்தல் திணைக்களத்திற்கான மேந்தலைக் கிரய உறிஞ்சல் விகிதம் ……..…..……….
2. $\mathscr{X}$ பொருளின் அலகுக்கான மொத்த மேந்தலைக் கிரயம் ரூ. ………………….……………..

48. சாந்தனி கம்பனி விசேட பாதுகாப்புடனான செருப்பு வகையினை தயாரிப்பதற்காகப் பெற்ற மூலப்பொருள் தொடர்பான தகவல்கள் கீழ்வருமாறு,

    வாரத்துக்கான சராசரி நுகர்வு 1 200kg
    சராசரி கட்டளைக் காலம் 05 வாரங்கள்
    ஆகக்குறைந்த கட்டளைக் காலம் 02 வாரங்கள்
    ஆகக்குறைந்த பாவனை (வாரத்திற்கு) 400 kg
    மறு கட்டளைத் தொகை 300 kg

கீழ்வருவனவற்றைக் கணிக்க.

1. மறு கட்டளை மட்டம் ……………………..….
2. ஆகக்கூடிய மட்டம் …………………..
3. ஆகக் குறைந்த மட்டம் …………..…..…….
4. சராசரி இருப்பு மட்டம் ………………

49. லாவண்யா ஆடை உற்பத்தி நிறுவனம் விசேட வகையான ஜக்கெட்களைத் தயாரிப்பதுடன் தொடர்-புடைய தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

விற்பனை அலகுகள்	**மொத்த கிரயம் (ரூ.)**
100	150 000
150	180 000

பங்களிப்பு விற்பனை விகிதம் 40%

1. சமப்பாட்டுப் புள்ளி அலகுகள் ……………………………………………………………...
2. ரூ. 48 000 இலாபம் பெறுவதற்கு விற்பனை செய்ய வேண்டிய ஜக்கெட்டுகளின் எண்ணிக்கை ………………………………………………………………………………………

50. விதாரன் கம்பனி தமது குடிநீர் போத்தல் உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கில் பயன்பாட்டிலுள்ள இயந்திரத்திற்காகப் புதிய இயந்திரத்தைக் கொள்வனவு செய்ய எதிர்பார்க்கின்றது. அதனுடன் தொடர்புடைய தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

புதிய இயந்திரத்தின் பயனுள்ள ஆயுட்காலம் ……….………….	5 வருடங்கள்
பழைய இயந்திரத்தின் விற்பனை விலை ……………………….	ரூ. 180 000
புதிய இயந்திரத்தின் கொள்வனவு விலை …………………...….	ரூ. 600 000
பொருத்துதல் கிரயம் ……………………………..……….……..	ரூ. 48 000
தொழிற்படு மூலதனத் தேவைப்பாடு …………….…………….	ரூ. 120 000
பழைய இயந்திரத்தின் விற்பனை விலை அடிப்படையிலான வரி	ரூ. 30 000
புதிய இயந்திரத்தின் எஞ்சிய பெறுமதி …………….………….	ரூ. 10 000
வருடாந்த காசு உட்பாய்ச்சல் …………………………………...	ரூ. 300 000

வேண்டப்படுவது:

1. அடிப்படை முதலீடு ரூ. ……………………………………………………………………...
2. ஐந்தாவது வருடத்தில் காசுப்பாய்ச்சல் ரூ. ……………………………………………………

* * * * *

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) - විභාගය, 2025 (පෙරහුරු ප්‍රශ්න පත්‍රය)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025 (பயிற்சி வினாத்தாள்)
General Certificate of Education (Adv. Level) Examination, 2025 (Practice Paper)

Ministry of Education, Higher Education and Vocational Education

ගිණුම්කරණය II
கணக்கீடு II
Accounting II

33 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

செய்நிரலாக்கத்தகா (Non-Programmable) கணிப்பான்கள் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும்.

அறிவுறுத்தல்கள் :

* **முதலாம், இரண்டாம்** வினாக்கள் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* ஒவ்வொரு வினாவுக்கும் **புதிய தாளில்** விடை எழுத ஆரம்பித்தல் வேண்டும்.
* உரிய செய்முறைகள் விடைத்தாளுடன் இணைக்கப்பட வேண்டும்.
* இவ்வினாத்தாளுக்கு **200** புள்ளிகள் உரித்தாகும்.

1. வரையறுக்கப்பட்ட திலீபன் பொதுக் கம்பனி VAT இற்காகப் பதிவு செய்யப்பட்ட கம்பனியாகும். 31.03.2025 திகதியில் கம்பனியின் சுருக்கப்பட்ட பரீட்சைமீதி கீழே காட்டப்பட்டுள்ளது. ප්‍රශ්න

விபரம்	**வரவு (ரூ. '000)**	**செலவு (ரூ. '000)**
ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் (கிரயம் / பெறுமதி)	90 000	
விற்பனைகள் (VAT உடன்)		88 500
31.03.2025 திகதியில் திரண்ட பெறுமானத் தேய்வு		22 250
விற்பனைக் கிரயம்	43 000	
வியாபாரக் கடன்பட்டோர்	16 000	
குத்தகைக்கடன் செலுத்தியது	1 000	
வியாபாரக் கடன்கொடுத்தோர்		11 000
மோட்டார் வாகன விற்பனையால் பெற்ற காசு		2 000
நிர்வாகச் செலவுகள்	13 500	
காசும் காசுக்குச் சமமானவையும்	2 300	
விநியோகக் கிரயம்	14 000	
நிதிக் கிரயம்	1 000	
ஏனைய செலவுகள்	1 500	
செலுத்திய வருமானவரி	1 900	
01.04.2024 திகதியில் வருமானவரி ஏற்பாடு		500
இருப்புக்கள்	4 800	
01.04.2024 திகதியில் உத்தரவாத ஏற்பாடு		400
கூறப்பட்ட சாதாரணப் பங்கு மூலதனம்		45 000
01.04.2024 திகதியில் நிறுத்தி வைத்த வருவாய்		16 350
01.04.2024 திகதியில் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்		3 000
	189 000	**189 000**

மேலதிக தகவல்கள்:

(i) நிர்வாகச் செலவுகளினுள் கீழ்வரும் செலவுகள் உள்ளடங்கியுள்ளது.

இயக்குனர் சம்பளம்	800 000
பெறுமானத் தேய்வு	2 750 000
கணக்காய்வுக் கட்டணம்	400 000
செலுத்திய இடைக்காலப் பங்குலாபம்	1 800 000

31.03.2025 திகதியில் கணக்காய்வுக் கட்டணம் ரூ. 100 000 அட்டுறுவாக உள்ளது.

(ii) பொருள் விற்பனைப் பெறுமதியினுள் அறவிடப்பட்ட VAT ரூ. 13 500 000 உம் கொள்வனவுப் பெறுமதியினுள் செலுத்திய VAT ரூ. 8 200 000 உம் உள்ளடங்கியுள்ளது.

(iii) கம்பனியால் ஜனவரி மாதம் 31 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 30 வரை ஒவ்வொரு மாதத்தின் இறுதித் திகதியிலும் பொருட்களை வழங்குவதற்கு வழங்குனருடன் ஒப்பந்தம் 20.01.2025 அன்று, செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதத்தின் இறுதித் திகதியிலும் அனுப்பப்பட்ட பொருளின் VAT நீக்கிய விற்பனை விலை ரூ. 300 000 ஆவதுடன் ஒப்பந்தம் ஏற்பட்ட திகதியில் 18% ஆன VAT உள்ளடக்கிய ஒப்பந்தத்தின் முழுக்காசும் வணிகத்தால் பெறப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்ட திகதியில் விற்பனையாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இருப்பினும் 31.03.2025 அன்று அனுப்ப வேண்டிய இருப்புக்களைப் பொதியிடுவதில் தாமதமாகிய காரணத்தினால் வாடிக்கையாளருக்கு 05.04.2025 அன்றே அனுப்பப்பட்டது. காலதாமதமாகிய காரணத்தால் வாடிக்கையாளருக்கு ஏற்பட்ட நட்டத்திற்கு எதிராக வியாபாரத்தினால் தீர்வு ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

(iv) 31.03.2025 திகதியில் ரூ. 500 000 ஆன கடன்படடோர் 01.05.2025 அன்று வலுவிழங்தவராகப் பிரகடனப்படுத்தியதுடன் ரூ. 800 000 கிரயமான இருப்பின் ஒரு பகுதியானது 10.04.2025 அன்று ரூ. 700 000 இற்கு விற்கப்பட்டது. கம்பனியின் இயக்குனர் சபை நிதிக்கூற்றுக்களுக்கு 30.05.2025 இல் அங்கிகாரமளித்தனர்.

(v) ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் தகவல்கள் பின்வருமாறு கீழே காட்டப்பட்டுள்ளது.

	31.03.2025 திகதியில் கிரயம் / பெறுமதி (ரூ. '000)	**31.03.2025 திகதியில் திரண்ட தேய்வு (ரூ. '000)**	**நேர் கோட்டு முறையில் வருடாந்த பெறுமானத் தேய்வு வீதம்**
காணி	40 000	--	--
கட்டடம்	25 000	9 250	5%
மோட்டார் வாகனங்கள்	15 000	9 000	12%
காரியாலய உபகரணங்கள்	10 000	4 000	15%

- 31.03.2025 திகதியில் காணி ரூ. 38 000 000 இற்கு இரண்டாவது முறையாக மீள்மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும் இது தொடர்பாக புத்தகங்களில் பதியப்படவில்லை. இந்த காணி 01.06.2023 அன்று முதல் முறையாக மீள்மதிப்பீட்டில் பெற்ற மிகை ரூ. 1 500 000 ஆனது மீள்மதிப்பீட்டு ஒதுக்க கணக்கில் செலவில் பதியப்பட்டுள்ளது.

- 01.10.2024 அன்று ரூ. 1 920 000 ஆன தேறிய பெறுமதியைக் கொண்ட மோட்டார் வாகனம் ரூ. 2 000 000 இற்கு விற்பனை செய்யப்பட்டது. விற்பனைத் திகதியில் இது கொள்வனவு செய்யப்பட்டு 03 வருடமாகியிருந்தது. கிடைத்த காசு, காசுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு மோட்டார் வாகன விற்பனைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளதுடன் இவ்விற்பனையைக் கவனிக்காது கணிக்கப்பட்ட பெறுமானத் தேய்வு விநியோகக் கிரயத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

- 31.03.2025 அன்று ரூ. 1 180 000 இற்கு கம்பனியின் பாவனைக்காக போட்டோ பிரதி இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டதுடன் இந்த பெறுமதியினுள் ரூ. 180 000 VAT உள்ளடங்கியுள்ளது. அந்த இயந்திரத்தின் கொள்வனவுக்காகச் செலுத்தப்பட்ட மொத்தப் பெறுமதி காரியாலய உபகரண கணக்கில் வரவு வைக்கப்பட்டதுடன் மொத்தப் பெறுமதிக்கு வருடத்துக்கான பெறுமானத் தேய்வு கணிக்கப்பட்டுள்ளது.

(vi) 01.04.2024 அன்று குத்தகை அடிப்படையின் கீழ் இயந்திரமொன்று வாங்கப்பட்டதுடன் தொடர்புடைய தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

சொத்து பாவனை உரிமையின் கிரயம்	5 000 000
பயனுள்ள ஆயுட்காலம்	10 வருடங்கள்
குத்தகைக் காலம்	5 வருடங்கள்
உடன் காசுக் கொடுப்பனவு	1 000 000
வருடாந்த குத்தகைத் தவணைக்கட்டணம்	1 200 000

ஒப்பந்த காலத்தின் இறுதியில் இயந்திரத்தின் உரிமை திலீபன் கம்பனிக்கு உரித்தாகும்.

ஒவ்வொரு கணக்காண்டின் இறுதியிலும் தவணைக்கட்டணம் செலுத்தப்பட வேண்டியதுடன் இந்த வருடத்துள் செலுத்திய உடன் காசு மட்டும் குத்தகைக் கொடுப்பனவு கணக்கிற்கு மாற்றப்பட்டமை தவிர வேறு பதிவுகள் மேற்கொள்ளப்படவில்லை. ரூ. 1 200 000 ஆன குத்தகைத்

தவணைக் கட்டணம் செலுத்தப்பட்டது 01.04.2025 திகதியிலாகும். 2024 / 2025, 2025 / 2026, 2026 / 2027 வருடத்துக்கான குத்தகை வட்டி முறையே ரூ. 600 000, ரூ. 510 000, ரூ. 406 500 ஆகும்.

(vii) கம்பனி பொருள் விற்பனைக்கு ஒரு வருட உத்தரவாத காலத்தினை வழங்குவதுடன் 2024 / 2025 வருடத்துள் ரூ. 450 000 இனை விற்பனை உத்தரவாதத்துக்காகச் செலுத்தியுள்ளதுடன் அது விநியோகக் கிரயத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. 31.03.2025 திகதியன்று உத்தரவாதச் சான்றிதழுக்கான ஏற்பாட்டுக்காக ரூ. 650 000 மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

(viii) 2024 / 2025 இல் முடிவடையும் காலாண்டுக்கான வருமானவரிப் பொறுப்பு ரூ. 750 000 என மதிப்பிடப்பட்டுள்ளது. செலுத்திய வருமானவரியினுள் 2023 / 2024 வருடத்துக்காகச் செலுத்திய தொகையான ரூ. 400 000 உள்ளடங்கியுள்ளது.

வேண்டப்படுவது:

'LKAS 1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்' இன்படி பிரசுர நோக்கத்துக்கான வரையறுத்த திலீபன் பொதுக் கம்பனியின் பின்வரும் நிதிக்கூற்றுக்கள் (குறிப்புக்கள் உட்பட)

(1) 31.03.2025 இல் முடிவடையும் வருடத்துக்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக்கூற்று

(2) 31.03.2025 இல் உள்ளவாறான நிதிலைமைக்கூற்று

(3) 31.03.2025 இல் முடிவடையும் வருடத்துக்கான உரிமையாண்மை மாற்றல்கூற்று

(மொத்தம் 40 புள்ளிகள்)

2. (அ) ''முதிரை என்டபிரைசஸ்'' மரத்தளபாட வியாபாரத்தை மேற்கொள்கின்றது. இந்த வியாபாரத்தில் மூன்று ஊழியர்கள் தொழில் புரிகின்றனர். 2025 வருடத்தின் மார்ச் மாதத்துக்கான ஊழியர் சம்பளம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- ஒரு ஊழியர் அடிப்படை சம்பளத்துக்காக மாதத்திற்கு குறைந்தது 160 மணித்தியாலம் வேலை செய்ய வேண்டும்.
- வார நாட்கள் மற்றும் வார இறுதி நாட்களில் மேலதிக நேர வேலைக்கான உரிமை காணப்படுவதுடன் மேலதிக நேர வேலைக்கான கொடுப்பனவு சாதாரண மணித்தியாலத்தின் 150% ஆகும்.
- அடிப்படை சம்பளத்தில் ஊழியர் சேமலாப நிதி (EPF)க்கான ஊழியர் பங்களிப்பு 10% உம் தொழில் கொள்வோர் பங்களிப்பு 15% உம் ஆகும். ஊழியர் நம்பிக்கை நிதி (ETF)க்கான பங்களிப்பு தொழில் கொள்வோர் 3% ஆகும்.

மேலதிக தகவல்கள்:

(i) ஊழியர் சம்பளம் தொடர்பான தகவல்கள்

ஊழியர் இல.	**மாதத்தில் வேலை செய்த மணித்தியாலம்**	**வாழ்க்கைச் செலவுப் படிகள்**	**EPF ஊழியர் பங்களிப்பு**	**நலன்புரிச் சங்கக் கட்டணம்**	**சம்பள முற்பணம்**
01	180	20 000	8 000	2 000	50 000
02	200	20 000	7 200	2 000	---
03	170	20 000	6 400	2 000	25 000

(ii) 2025 பெப்ரவரி மாதத்துக்கான சம்பளம் தொடர்பாக பெயர்த்தெடுக்கப்பட்ட தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

	(ரூ. '000)
அடிப்படைச் சம்பளம்	240
மேலதிக நேரக் கொடுப்பனவு	95
வாழ்க்கைச் செலவுப் படிகள்	60
EPF - ஊழியர்	24
- தொழில் கொள்வோர்	36
நலன்புரிச் சங்கத்துக்கான அறவீடு	6
சம்பள முற்பணம்	65

(iii) ஒரு மாதத்துக்கான சம்பளம் அடுத்த மாதத்தின் 10 ஆம் திகதியும் EPF மற்றும் ETF அடுத்த மாதத்தின் முதல் இரு வாரங்களுக்குள்ளும் செலுத்தப்படும்.

வேண்டப்படுவது:

(1) 2025 மார்ச் மாதத்துக்கான சம்பளப் பட்டியல்

(2) மாரச் மாதத்துக்கான,

1. சம்பளக் கணக்கு
2. சம்பளக் கட்டுப்பாட்டுக் கணக்கு
3. செலுத்த வேண்டிய EPF மற்றும் ETF கணக்கு

(3) 2025 மார்ச் மாதத்துக்கான நிறுவனத்தின் சம்பளத்துக்கான மொத்தச் செலவு எவ்வளவு?

(15 புள்ளிகள்)

(ஆ) உற்பத்திக் கம்பனி ஒன்று A, B எனப் பெயரிடப்பட்ட இரண்டு வகைப் பொருட்களை உற்பத்தி செய்கிறது. இந்த பொருட்களின் உற்பத்திக்காக ஒன்றிணைத்தல் மற்றும் பொருத்துதல் ஆகிய உற்பத்தி கிரய நிலையங்கள் இரண்டும் மற்றும் களஞ்சியம் என்ற சேவை நிலையமும் உருவாக்கப்பட்டுள்ளன.

31.03.2025 திகதியில் முடிவடையும் வருடத்துக்காகப் பாதிடப்பட்ட மேந்தலைக்கிரய அடிப்படையில் கணிக்கப்பட்ட மேந்தலைக்கிரய உறிஞ்சல் வீதம் கீழே காட்டப்பட்டுள்ளது.

ஒன்றிணைத்தல் கிரய நிலையம் - இயந்திர மணித்தியால அடிப்படையில் ரூ. 45

பொருத்துதல் கிரய நிலையம் - ஊழிய மணித்தியால அடிப்படையில் ரூ. 30

இருந்த போதும் இந்த விகிதத்தைக் கணக்கிடும் போது கீழுள்ள பாதிடப்பட்ட மேந்தலைக் கிரயங்கள் கணக்கில் எடுக்கப்படவில்லை என்பது அடையாளம் காணப்பட்டது.

	ரூ.
நேரில் பொருள் - ஒன்றிணைத்தல்	186 000
- பொருத்துதல்	94 000
தொழிற்சாலை வாடகை	600 000
மின்சாரம்	450 000
இயந்திர பெறுமானத் தேய்வு	700 000
2025 மார்ச் களஞ்சியக் காப்பாளர் சம்பளம்	90 000
நேரில் கூலி	540 000

கிரய நிலையங்களுடன் தொடர்புடைய தகவல்கள்

விபரம்	ஒன்றிணைத்தல்	பொருத்துதல்	களஞ்சியம்
பரப்பளவு	1 500	1 000	500
கிலோவாற்ஸ்	6 000	5 000	4 000
ஊழியர் எண்ணிக்கை	30	16	8
இயந்திரக் கிரயம் (ரூ.)	5 000 000	2 000 000	
பாதிடப்பட்ட இயந்திர மணி	10 000	3 000	
பாதிடப்பட்ட ஊழிய மணி	2 500	8 000	

- களஞ்சியத்தின் மொத்த மேந்தலைக் கிரயம் ஒன்றிணைத்தல் மற்றும் பொருத்துதல் திணைக்-களங்களுக்கிடையில் 60% மற்றும் 40% என்ற விகிதத்தில் பகிரப்படுகின்றது.
- மொத்த மேந்தலைக் கிரயமானது ஒன்றிணைத்தல் திணைக்களத்தில் இயந்திர மணித்தியாலய அடிப்படையிலும் பொருத்ததல் திணைக்களத்தில் நேர் ஊழிய மணித்தியாலய அடிப்படை-யிலும் உறிஞ்சப்படும்.

கீழ்வரும் தகவல்கள் A, B பொருள்களுடன் தொடர்புடையவையாகும்.

	A	B
நேர் மூலப்பொருள் கிரயம் (அலகுக்கு)	800	500
நேர் கூலிக் கிரயம் (அலகுக்கு)	335	370

அலகொன்றின் உற்பத்திக்காக எடுக்கப்பட்ட உண்மை மணித்தியாலம்

	ஒன்றிணைத்தல்	பொருத்ததல்
இயந்திர மணித்தியாலம்	3	2
ஊழிய மணித்தியாலம்	2	3

அலகொன்றுக்கான உற்பத்தியல்லா மாறுங்கிரயம் ரூ. 120 ரூ. 50

A பொருளின் விற்பனை விலை கிரயத்தில் 25% மற்றும் B பொருளின் விற்பனை விலை, விற்பனை விலையில் 20% மொத்த இலாபத்திலும் பட்டியலிடப்படுகின்றது.

வேண்டப்படுவது:

(1) தற்போது கணிக்கப்பட்டுள்ள மேந்தலைக் கிரய பகுப்பாய்வினைத் தெளிவாகக் காட்டும் மேந்தலைப் பகுப்பாய்வு அட்டவணை

(2) ஒவ்வொரு உற்பத்திக் கிரய நிலையங்கள் தொடர்பாகவும் சரியான மேந்தலை கிரய உறிஞ்சல் விகிதம்

(3) A மற்றும் B பொருளின் அலகுக் கிரயம்

(4) A மற்றும் B பொருளின் விற்பனை விலை

(25 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள)

3. (அ) அமிர்தா வியாபாரம் எழுதுபொருள் விற்பனை செய்யும் வியாபாரத்தை நடாத்துகின்றது. இந்த வியாபாரத்தின் 01.03.2025 திகதியில் ஆரம்ப மீதி மற்றும் 2025 மார்ச் மாதத்துள் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல் கணக்கீட்டு சமன்பாட்டு முறையில் கீழே காட்டப்பட்டுள்ளது.

(ரூ. '000)

	சொத்துக்கள்					பொறுப்புக்கள்		உரிமை யாண்மை
	மரத் தளபா டங்கள், உபகர ணங்கள்	எழுது பொருள் இருப்பு	வியாபார கடன்பட் டோர்	கட்டட வாடகை முற்பணம்	காசு	வியாபாரக் கடன் கொடுத் தோர்	வங்கிக் கடன்	மூலதனம்
ஆரம்ப மீதி	800	350	170	480	1 200	300	900	1 800
1.	+ 200				– 200			
2.		+ 600			– 600			
3.		– 200	+ 300					+ 100
4.		+ 20	– 30					– 10
5.			– 170		+ 160			– 10
6.					– 100			– 100
7.		+ 130				+ 130		
8.		– 30				– 30		
9.					– 180	– 200		+ 20
10.					– 110		– 100	– 10
11.								+ 20 – 20
12.		– 50						– 50
13.		– 300			+ 450			+ 150
14.				– 40				– 40
15.	– 10							– 10
இறுதி மீதி	**990**	**520**	**270**	**440**	**620**	**200**	**800**	**1 840**

மேலதிக தகவல்கள்:

மார்ச் மாத காலத்துள் கீழ்வரும் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் இடம்பெற்று இருப்பினும் அவை கணக்குகளில் பதியப்படவில்லை.

1) உரிமையாளர் தனது சொந்தப் பாவனைக்கு வியாபாரத்திலிருந்து ரூ. 180 000 பெறுமதியான இருப்பை எடுத்துச் சென்றுள்ளார். (உரிமையாளர் மேற்கொண்ட பற்றுக்கான சந்தர்ப்பம் இது ஒன்று மட்டுமே)
2) பதிவழிக்கப்பட்ட அறவிடமுடியாக்கடன் ரூ. 30 000 புத்தகங்களில் பதியப்படவில்லை.
3) 2025 மார்ச் மாதத்துக்கான வங்கிக்கூற்றில் இருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன,
   1. வங்கி அறவிட்ட வங்கிக்கட்டணம் 15 000
   2. நிலையான கட்டளைக்கமைய வங்கி செலுத்திய காப்புறுதிக் கட்டணம் 160 000
   3. கடன்பட்டோர் நேரடி வைப்புக்கள் 100 000
   4. வங்கி திரட்டிய பங்குலாப வருமானம் 250 000
4) இந்த மாதத்திலிருந்து கடன்பட்டோர் இறுதி மீதியில் 10% ஐயக்கடன் ஏற்பாடு செய்வதற்கு நிறுவனம் தீர்மானித்துள்ளது.

வேண்டப்படுவது:

(1) மேலே இல. 1 – 15 வரையில் காட்டப்பட்டுள்ள பெறுமதிகளுக்கான கொடுக்கல் வாங்கல்களை (தொகைகளுடன்) எழுதிக் காட்டுக.

(2) 2025 மார்ச் மாதத்துக்கான வருமானக்கூற்று

(3) 31.03.2025 திகதியன்று,

1. காசு மீதி ……
2. கடன்பட்டோர் தேறிய மீதி …..

(30 புள்ளிகள்)

(ஆ) ரிஷ்வியின் வியாபாரத்தில் 31.03.2025 இல் முடிவடையும் வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட வருமானக் கூற்றுக்கமைய தேறிய இலாபம் ரூ. 485 000 ஆகும்.

பின்னர் மேற்கொள்ளப்பட்ட கணக்கு பரிசீலனையின் போது கீழ்வரும் வழுக்கள் மற்றும் விடுபாடுகள் இடம்பெற்றுள்ளதாக வெளிப்படுத்தப்பட்டது.

1. ரூ. 12 000 ஆன செலவுத்தாள் ஏடுகளில் பதியப்படவில்லை.
2. மின்கட்டணம் செலுத்தியது ரூ. 85 000 ஆனது ரூ. 58 000 என மின்கட்டணக் கணக்கில் பதியப்பட்டுள்ளது.
3. அறவிடமுடியாக்கடன் பதிவழித்தது ரூ. 100 000 அறவிடமுடியாக்கடன் கணக்கினைப் போன்று கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கிலும் வரவில் பதியப்பட்டுள்ளது.
4. தரணியிடம் கடனுக்கு வாங்கிய பொருட்கள் ரூ. 250 000 ஆன பொருட்கள் கொள்வனவு நாளேட்டில் சரியாகப் பதியப்பட்டுள்ள போதும் தரணியின் கணக்கில் வரவுப் பக்கத்தில் பதியப்பட்டுள்ளது.
5. பெற்ற தரகு ரூ. 80 000 ஆனது இரண்டு கணக்குகளிலும் வரவில் பதியப்பட்டுள்ளது.
6. 01.01.2025 அன்று ரூ. 200 000 ஆன பாவனைக்கான உபகரணங்களின் கொள்வனவு, கொள்வனவுக் கணக்கில் பதியப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் உபகரணங்களுக்கு கிரயத்தில் வருடத்திற்கு 12% பெறுமானத் தேய்விடுவது வழக்கமாகும்.

வேண்டப்படுவது:

(1) மேற்காட்டப்பட்ட வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகள்

(2) இலாபத்தைத் திருத்துவதற்கான கூற்று

(10 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

4. (அ) வரையறுத்த கமல் பொதுக் கம்பனி வியாபார வணிகமாகக் காணப்படுவதுடன் அது பெறுமதி சேர் வரிக்காகப் (VAT) பதிவு செய்யப்பட்டுள்ளது. கம்பனி பொருட் கொள்வனவைக் கடனுக்கும் விற்பனையினைக் காசு மற்றும் கடனுக்கு ஆகிய இரு முறைகளிலும் மேற்கொள்கின்றது. 31.03.2025 திகதியில் முடிவடையும் மாதத்துக்கான கீழ்வரும் தகவல்கள் வியாபாரத்தின் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பேரேடுகளிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்டது.

31.03.2025 திகதியில் கடன்பட்டோர் பேரேடு **(ரூ. '000)**

விபரம்	விமல் ரேடர்ஸ்	நிமல் ரேடர்ஸ்	கமல் ரேடர்ஸ்	மொத்தம்
01.04.2024 இல் மீதி	200	100	50	350
விற்பனை (18% VAT உட்பட)	118	---	236	354
காசுப் பெறுவனவு	(150)	(45)	(200)	(395)
கொடுத்த கழிவு	(10)	(5)	---	(15)
31.03.2025 இல் மீதி	**158**	**50**	**86**	**294**

31.03.2025 திகதியில் கடன்கொடுத்தோர் பேரேடு **(ரூ. '000)**

விபரம்	பரத் ரேடர்ஸ்	லியோ ரேடர்ஸ்	சீலன் ரேடர்ஸ்	மொத்தம்
01.04.2024 இல் மீதி	150	250	350	750
கொள்வனவு (18% VAT உட்பட)	59	177	295	531
காசுக் கொடுப்பனவு	(60)	(120)	(200)	(380)
பெற்ற கழிவு	--	(20)	(10)	(30)
31.03.2025 இல் மீதி	**149**	**287**	**435**	**871**

31.03.2025 திகதியில் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளின் பட்டியலின் கூட்டுத் தொகை ஆனது அத்தினத்திலான கட்டுப்பாட்டுக் கணக்குகளின் மீதியுடன் இணங்கிக் காணப்பட்டது.

01.03.2025 திகதியில் காசுக் கணக்கின் மீதி ரூ. 75 000 வரவிலும் VAT கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூ. 45 000 செலவிலும் காணப்பட்டது. கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பேரேடுகளில் உள்ளடக்கப்பட்ட காசுக் கொடுக்கல்வாங்கல்களுக்கு மேலதிகமாகக் கீழ்வரும் காசுக் கொடுக்கல் வாங்கல்கள் 2025 மார்ச் மாதத்தில் இடம்பெற்றுள்ளன.

- கம்பனியின் காசுக்கு விற்பனை ரூ. 1 416 000 ஆகும். (18% VAT உட்பட)
- கம்பனியின் காசுக் கொள்வனவுகள் ரூ. 590 000 ஆகும். (18% VAT உட்பட)
- கம்பனி ரூ. 236 000 இனைக் காசாகச் செலுத்தி புதிய இயந்திரத்தைக் கொள்வனவு செய்து உள்ளது. (18% VAT உட்பட)
- ஏனைய செலவுகள் ரூ. 59 000 செலுத்தப்பட்டுள்ளது. (18% VAT உட்பட)

வேண்டப்படுவது:

31.03.2025 திகதியில் முடிவடையும் மாதத்துக்கான கீழ்வரும் நாளேடுகள் மற்றும் கணக்குகள்

(1) கொள்வனவு நாளேடு
(2) விற்பனை நாளேடு
(3) காசுப் பெறுவனவு நாளேடு
(4) காசுக் கொடுப்பனவு நாளேடு
(5) காசுக் கணக்கு, கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு, கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு, VAT கட்டுப்பாட்டுக் கணக்கு

(20 புள்ளிகள்)

(ஆ) வரையறுத்த கமல் பொதுக் கம்பனி ஏற்றுமதிச் சந்தைக்கான ஆடைகளை உற்பத்தி செய்கிறது. அதிக கேள்வி காரணமாக உற்பத்தி செயற்பாட்டின் செயற்பாட்டு மட்டத்தை அதிகரிக்கும் நோக்கில் துணி வெட்டும் திணைக்களத்துக்காக புதிய தொழில் நுட்பத்துடன் கூடிய துணி வெட்டும் இயந்திரத்தைக் கொள்வனவு செய்யும் செயற்றிட்டத்தை கம்பனி பரிசீலனை செய்து வருகின்றது.

புதிய இயந்திரத்தின் பாதிடப்பட்ட விலை ரூ. 2 000 000 ஆகும். அதன் எதிர்பார்க்கப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் எஞ்சிய பெறுமதி என்பன முறையே 5 வருடங்கள் மற்றும் ரூ. 50 000 ஆகும். மேலும் புதிய இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கு ஆரம்ப பரிசீலனை மற்றும் விசேட ஆலோசனை என்பவற்றுக்காக ரூ. 100 000 செலுத்த வேண்டிவரும் எனக் கம்பனி

தீர்மானித்துள்ளது. புதிய இயந்திரத்தின் வழங்குனரின் இடத்திலிருந்து கம்பனியின் ஆடைத் தொழிற்சாலைக்கான போக்குவரத்து மற்றும் தாபிப்பதற்காக ரூ. 300 000 காசு செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த செயற்றிட்டத்துடன் தொடர்புடைய ஏனைய பாதிடப்பட்ட காசுப் பாய்ச்சல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

1. செயற்றிட்டத்தின் ஆரம்பத்தில் புதிய இயந்திரத்தின் அதிக செயற்றிறன் காரணமாக மேலதிக மூலப்பொருள் தேவைப்படுவதால் மேலதிக தொழிற்படு மூலதனத் தேவையானது ரூ. 400 000 ஆகும். அது செயற்றிட்டத்தின் இறுதியில் மீளப்பெறப்படும்.
2. புதிய இயந்திரத்தின் அதிக செயற்றிறன் காரணமாக வருடாந்த செயற்பாட்டுச் செலவுகள் ரூ. 200 000 ஆல் குறைவடைவதுடன் விற்பனை வருமானம் ரூ. 500 000 இனால் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த செயற்றிட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட திரும்பல் வீதம் 10% ஆவதுடன் அதற்கான கழிவீட்டுக் காரணி கீழே காட்டப்பட்டுள்ளது.

வருடம்	1	2	3	4	5
கழிவீட்டுக் காரணி (இரண்டு தசமங்களில்)	0.91	0.83	0.75	0.68	0.62

வேண்டப்படுவது:

(1) செயற்றிட்டத்தின் ஒவ்வொரு வருடத்துக்குமான காசுப் பாய்ச்சல் அட்டவணை

(2) செயற்றிட்டத்தின் தேறிய நிகழ்காலப் பெறுமதி (NPV)

(3) தேறிய நிகழ்காலப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு கொள்வனவு செய்வது பொருத்தமானதா? / இல்லையா என்பதற்கான நியாயப்படுத்தல்.

(10 புள்ளிகள்)

(இ) 2025 ஏப்ரல் மாதத்தில் குடிநீர் போத்தலில் அடைத்தலில் ஈடுபடும் அரலிய என்டபிரைசஸ் பெயருடைய தனி வியாபாரத்தில் காசாக இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. 2025 ஏப்ரல் 01 அன்று காசுக் கணக்கின் மீதி ரூ. 100 000 ஆகும்.
2. இம்மாத்தில் இடம்பெற்ற காசுக்கு விற்பனை ரூ. 250 000 ஆகவும் கடனுக்கு விற்பனையானது ரூ. 75 000 ஆகவும் காணப்பட்டது.
3. இம்மாத்தில் இடம்பெற்ற காசுக் கொள்வனவு ரூ. 150 000 ஆகவும் கடனுக்குக் கொள்வனவு ரூ. 100 000 ஆகவும் காணப்பட்டது.
4. இம்மாத்தில் இடம்பெற்ற கடன் விற்பனைக்காக கடன்பட்டோரிடம் ரூ. 50 000 காசோலை மூலம் கிடைத்துள்ளது.
5. இம்மாத்தில் இடம்பெற்ற கடன் கொள்வனவிற்காக ரூ. 80 000 காசோலை மூலமாகச் செலுத்தப்-பட்டது.
6. நீர் நிரப்பும் இயந்திரத்தின் மாதத்துக்கான செயற்பாட்டுச் செலவு ரூ. 15 000 காசோலை மூலம் செலுத்தப்பட்டுள்ளது.

கீழ்வரும் மேலதிக தகவல்கள் 03.05.2025 அன்று கிடைக்கப் பெற்ற வங்கிக்கூற்றிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்டதுடன் அந்த தகவல்கள் வியாபாரத்தின் காசு மீதியைக் கணக்கிடப்படும் போது கணக்கிலெடுக்கப்படவில்லை.

1) கடன்கொடுத்தோருக்குச் செலுத்திய ரூ. 20 000 காசோலை கொடுப்பனவுக்காக வங்கியில் சமர்ப்பிக்கப்படவில்லை.
2) கடன்பட்டோரிடம் பெறப்பட்ட ரூ. 15 000 காசோலை வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட போதும் இன்னும் வசூலாகவில்லை.
3) ஏப்ரல் மாதத்துக்கான வங்கிக்கட்டணம் ரூ. 5 000 ஆகும்.
4) வேறு வங்கியில் பெற்ற வங்கிக்கடனுக்காக, வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள நிலையான கட்டளைக்கமைய ரூ. 20 000 வங்கிக்கடன் தவணைக் கட்டணத்துக்காக செலுத்தப்பட்டது.

வேண்டப்படுவது:

(1) 2025 ஏப்ரல் மாதத்துக்கான காசுக் கணக்கு

(2) 2025 ஏப்ரல் மாதத்துக்கான வங்கிக்கணக்கிணக்கக்கூற்று

(10 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

5. (அ) அமாயா, நிமல் மற்றும் விஸ்மி என்போர் உற்பத்தி பங்குடமை வியாபாரத்தில் 31.03.2025 திகதியில் பரீட்சைமீதியிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்டவை கீழே காட்டப்பட்டுள்ளன.

	(ரூ. '000)
01.04.2024 திகதியில் மூலதன மீதி - அமாயா ………………….	8 000
- நிமல் …………………….	7 000
01.04.2024 திகதியில் நடைமுறைக் கணக்கு மீதி - அமாயா (வரவு)	300
- நிமல் (செலவு)	900
நிமலின் கடன் ………………………………………………	500
விஸ்மி வியாபாரத்துக் கொண்டு வந்த காசு …………………….	5 000
விஸ்மி வியாபாரத்துக் கொண்டு வந்த மூலப்பொருள் …………..	1 000
விற்பனைகள் …………………………………………………….	10 500
விற்பனைக் கிரயம் ………………………………………………	6 200
செயற்பாட்டுச் செலவுகள் ………………….……………………...	2 010
விஸ்மியிடம் பெறவேண்டிய கட்டட வாடகை ……………………..	80
01.01.2025 அன்று பெற்றுக் கொண்ட வங்கிக்கடன் ……………...	1 000

மேலதிக தகவல்கள்:

1. 01.04.2024 அன்று விஸ்மி பங்குடமை வியாபாரத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டதுடன் அத் திகதியில் மதிப்பிடப்பட்ட நன்மதிப்பு ரூ. 1 800 000 ஆகும். இது மூலதனக் கணக்கினூடாக் சீராக்கப்பட வேண்டும்.
2. விஸ்மி இணைக்கப்படுவதற்கு முன் அமாயா மற்றும் நிமல் இலாப நட்டங்களை சமமாகப் பகிர்ந்ததுடன் புதிய இலாப நட்ட விகிதம் அமாயா, நிமல் மற்றும் விஸ்மி இடையில் முறையே 2 **:** 2 **:** 1 ஆகும்.
3. முன்னைய ஆண்டிலிருந்து முன்கொண்டுவந்த மூலதன மீதியின் அடிப்படையில் மூலதன வட்டி வருடாந்தம் 6% ஆகும். விஸ்மிக்கு வருடாந்த சம்பளம் ரூ. 600 000 உரித்தாகும்.
4. பங்காளர் பங்குடமைக்கு வழங்கிய கடன்களுக்காக வருடாந்த வட்டி 8% ஆகவும் வங்கிக் கடன் தொடர்பாக வருடாந்த வட்டியானது 16% ஆகும். நிமல் வியாபாரத்திற்கு வழங்கியுள்ள ரூ. 500 000 கடனுக்கு 01.10.2024 திகதியிலிருந்து அதனை ஈடுபடுத்திய மூலதனமாக்க ஏனைய பங்காளர்கள் உடன்பட்டனர்.
5. இவ்வருடத்தில் விஸ்மிக்குச் செலுத்திய சம்பளம் ரூ. 300 000 தவறுதலாக உற்பத்தி மேற் பார்வையாளருக்கான சம்பளத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. வியாபாரத்தினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மட்டும் விற்பனை செய்யப்படுவதுடன் 31.03.2025 திகதியில் இவ்வருடத்தில் உற்பத்தி செய்யப்பட்டு விற்கப்படாத எஞ்சிய இருப்புக்களின் பெறுமதியானது மேற்காட்டப்பட்ட சம்பளத்தின் $^{1}/_{10}$ பங்கிற்குச் சமனானதாகும். இது விற்பனைக் கிரய கணிப்பில் உள்ளடக்கப்படவில்லை.
6. இவ்வருடத்தில் வியாபாரத்தின் விற்பனை ஊழியர் சம்பளம் ரூ. 100 000 இனை அமாயா தனது சொந்தப் பணத்தில் செலுத்தியுள்ளதுடன் அமாயா மற்றும் நிமல் தலா ரூ. 120 000 ஆன காசுப் பற்றினை எடுத்துள்ளனர்.
7. 01.12.2024 திகதி முதல் வியாபாரத்தின் கட்டடத்தின் ஒரு பகுதி மதிப்பிடப்பட்ட வாடகை யான ரூ. 20 000 இற்கு விஸ்மிக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் பெறப்பட்டுள்ள வாடகை செயற்பாட்டு செலவில் குறைக்கப்பட்டு பெறவேண்டிய கட்டட வாடகைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது:

(1) 31.03.2025 திகதியில் முடிவடையும் வருடத்துக்கான பங்குடமை வியாபாரத்தின் வருமானக் கூற்று (பங்காளர்களுக்கான பகிர்வு உட்பட)

(2) 31.03.2025 திகதியில் முடிவடையும் வருடத்துக்கான பங்காளர் மூலதனக் கணக்குகள் மற்றும் நடைமுறைக் கணக்குகள்

(25 புள்ளிகள்)

(ஆ) விளையாட்டுச் சங்கம் அதன் திரண்ட நிதியை அதிகரிக்க ஆற்றில் படகுச் சுற்றுலா வேலைத் திட்டம் ஒன்றைத் திட்டமிட்டது. படகு சுற்றுலாவை இரண்டு தினங்கள் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன் ஒரு நாளில் 100 பேரை அழைத்துக்கொள்ளவும் நாள் ஒன்றுக்கு இரண்டு படகுகளை சேவையில் இணைத்துக் கொள்ளவும் திட்டமிடப்பட்டது.
அதற்காகப் பாதிடப்பட்ட கிரயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

	ரூ.
ஒரு படகுக்கான (செலுத்துபவர் உட்பட) நாள் கட்டணம் …………………………..	38 000
படகொனறுக்கு நாளொன்றுக்கான பிரயாணத்துக்கான எரிபொருள் கட்டணம்	17 000
உயிர் காப்பாளருக்கு ஒவ்வொரு சுற்றுலாப் பயணியும் செலுத்த வேண்டிய கட்டணம்	200
விளம்பரக் கிரயம் ………………………………………………………………..	10 000
பாதுகாப்பு ஜக்கட்டுகளை வாடகைக்கு எடுப்பதற்கான செலவு ……………………..	4 000

- ஒரு மணித்தியால படகு சவாரிக்காக சுற்றுலாப் பயணி ஒருவரிடம் ரூ. 2 000 ஆன கட்டணம் அறவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது:

(1) ஒரு சுற்றுலாப் பயணிக்கான பங்களிப்பு

(2) இவ்வேலைத் திட்டத்துக்கான மொத்த நிலையான கிரயம்

(3) மொத்தக் கிரயத்தை ஈடுசெய்வதற்காக இரு தினங்களிலும் வருகை தர வேண்டிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை யாது?

(4) இவ்வேலைத் திட்டத்தின் மூலம் ரூ. 90 000 மேலதிகத்தைப் பெற வேண்டுமாயின் இலாப நட்டமற்ற மட்டத்திற்கு மேலதிகமாக வருகை தர வேண்டிய பயணிகளின் தொகை என்ன?

(5) ரூ. 10 000 ஆன மேலதிக விளம்பரச் செலவினை மேற்கொண்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை உச்சப்படுத்தி ரூ. 180 000 மேலதிகத்தை உழைப்பதற்கு ஒரு பயணியிடம் அறவிட வேண்டிய கட்டணம் எவ்வளவு?

(15 புள்ளிகள்)
(மொத்தம் 40 புள்ளிகள்)

6. (அ) வரையறுத்த உதயன் பொதுக் கம்பனியின் 31.03.2025 மற்றும் 31.03.2024 ஆகிய திகதிகளில் நிதிநிலைமைக்கூற்றிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட தகவல்களாகும்.

	31.03.2025 (ரூ. '000)	31.03.2024 (ரூ. '000)
ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் (தேறிய பெறுமதி)	22 500	18 300
வியாபார வருமதிகள்	1 880	1 220
காசும் காசுக்குச் சமனானவையும்	2 425	520
கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள்	35 000	25 000
மீள்மதிப்பு ஒதுக்கம் (காணி)	8 000	---
நிறுத்திவைத்த வருவாய்	200	2 100
வியாபார சென்மதிகள்	1 975	1 080
அட்டுறு செயற்பாட்டுச் செலவுகள்	1 600	960
அட்டுறு வட்டி	500	---
வருமானவரி ஏற்பாடு	830	740

மேலதிக தகவல்கள்:

1. 31.03.2025 திகதியில் முடிவடையும் வருடத்துள் வியாபாரப் பொருட்கள் விற்பனை மற்றும் கொள்வனவு முறையே ரூ. 26 000 000 மற்றும் ரூ. 19 500 000 ஆகும். மொத்த விற்பனையில் 25% கடன் விற்பனையாகவும் மொத்த கொள்வனவில் 40% கடன் கொள்வனவாகவும் காணப்பட்டது.
2. வியாபார வருமதிகளைத் திரட்டும் போது ரூ. 290 000 ஆக கழிவு வழங்கப்பட்டதுடன் வியாபார சென்மதிகளைத் தீர்க்கும் போது ரூ. 330 000 கழிவு கிடைத்துள்ளது.
3. வருடத்துக்கான செயற்பாட்டுச் செலவுகள் ரூ. 8 500 000 ஆகவும் வருமானவரிச் செலவுகள் ரூ. 1 950 000 ஆகவும் காணப்பட்டது. செயற்பாட்டுச் செலவுகளில் உள்ளடங்கியுள்ள வருடாந்த பெறுமானத் தேய்வுப் பெறுமதி ரூ. 3 400 000 ஆகும்.

4. வருடத்துக்கான வட்டிச் செலவில் அரைவாசி மற்றும் 31.03.2024 அன்று இருந்த நீண்டகால கடன் ரூ. 2 000 000 உம் வருடத்தில் செலுத்தப்பட்டுள்ளது.
5. நிறுத்திவைத்த வருவாயைப் பயன்படுத்தி ரூ. 4 000 000 ஆன சாதாரணப் பங்குகள் வருடத்தில் வழங்கப்பட்டதுடன் மிகுதி சாதாரணப் பங்குகள் வழங்கலில் முழுப்பணமும் பெறப்பட்டுள்ளது. வருடகாலத்தில் பங்குலாப வழங்கல் இடம்பெற்றுள்ளது.
6. காணி முதல் முறையாக நடப்பாண்டில் மீள்மதிப்பீடு செய்யும் போது கிடைத்த மிகை மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் காட்டப்பட்டுள்ளது. காலப்பகுதிக்கான மொத்த முற்றுமடங்கிய வருமானம் ரூ. 12 600 000 ஆகும்.
7. இவ்வருடத்தில் ரூ. 7 500 000 ஆன தளபாடம் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் வியாபாரத்தின் பாவனைக்காக இருந்த உபகரணத்தை விற்பனை செய்ததன் மூலமாக ரூ. 50 000 இலாபம் கிடைத்துள்ளது.

வேண்டப்படுவது:

'LKAS 7 காசுப்பாய்ச்சல் கூற்று' இன்படி 31.03.2025 திகதியில் முடிவடையும் வருடத்துக்கான வரையறுத்த திலீபன் பொதுக் கம்பனியின் காசுப் பாய்ச்சல்கூற்று (நேர் முறையிலான செயற்பாட்டு நடவடிக்கைகளின் அடிப்படையிலான காசுப்பாய்ச்சல்)

(20 புள்ளிகள்)

(ஆ) கம்பனியொன்றின் 31.03.2025 மற்றும் 31.03.2024 ஆகிய வருடங்களுடன் தொடர்பாக கணிப்பிடப்பட்ட கணக்கீட்டு விகிதங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

	31.03.2025	**31.03.2024**
தேறிய இலாப வீதம்	20%	28%
நடைமுறை விகிதம்	1.95 : 1	1.2 : 1
கடன்பட்டோர் புரள்வு விகிதம்	12 தடவைகள்	8 தடவைகள்
கடன் விகிதம்	28%	40%
வட்டிக் காப்பு விகிதம்	6 தடவைகள்	9 தடவைகள்

மேலதிக தகவல்கள்:

1. இவ்வருட காலத்தில் மொத்த விற்பனை ரூ. 30 000 000 ஆகவும் மொத்த விற்பனையில் 80% ஆனது கடன் விற்பனையாகும்.
2. 01.04.2024 திகதியில் வியாபார வருமதிகளின் மீதி ரூ. 2 100 000 ஆகும்.
3. காலப்பகுதியில் வட்டிச் செலவுகள் ரூ. 1 600 000 ஆகும்.
4. நடைமுறைப் பொறுப்புக்கள் ரூ. 4 100 000 ஆகும்.
5. நீண்டகாலக் கடன் ரூ. 7 000 000 ஆகும்.

வேண்டப்படுவது:

(1) 31.03.2025 திகதியில் முடிவடையும் வருடத்துக்கான கீழ்வரும் பெறுமதிகள்
   1. காலப்பகுதிக்கான இலாபம்
   2. வருமானவரிச் செலவு
   3. 31.03.2025 திகதியன்று வியாபார வருமதிகள்
   4. 31.03.2025 திகதியன்று நடைமுறைச் சொத்துக்கள்
   5. 31.03.2025 திகதியன்று மொத்த உரிமையாண்மை

(2) 31.03.2024 திகதியில் முடிவடையும் வருடத்தை விட 31.03.2025 திகதியில் முடிவடையும் வருடத்தில் வியாபாரம் முன்னேறியுள்ளதா / பின்னடைந்துள்ளதா எனக் குறிப்பிடுக.

	முன்னேற்றம் / பின்னடைவு
1. தேறிய இலாபம்	……………………………..
2. குறுங்கால பணச்சுற்றோட்டம்	……………………………..
3. வியாபார கடன் வசூலிக்கும் திறன்	……………………………..
4. இருப்பு நிலை	……………………………..
5. கடன் வட்டி செலுத்துதல்	……………………………..

(10 புள்ளிகள்)

(இ) லங்கேஸ் உற்பத்தி தொழிற்சாலையின் தொழிலாளர் நலன்புரிச் சங்கத்தின் நிதிநிலைமைக் கூற்றிலிருந்து எடுக்கப்பட்ட தகவல்களன் கீழே காட்டப்பட்டுள்ளன.
31.03.2025 திகதியில் முடிவடையும் வருடத்துக்கானவை,

1. சிற்றுண்டிச்சாலையின் வருமானக்கூற்று **(ரூ. ‘000)**

விற்பனைகள்	1 820
விற்பனைக் கிரயம்	(900)
மொத்த இலாபம்	920
மின்கட்டணம்	(130)
பெறுமானத் தேய்வு	(80)
சம்பளங்கள்	(600)
ஏனைய செலவுகள்	(50)
வருடத்துக்கான இலாபம்	**60**

2. 31.03.2025 திகதியில் முடிவடையும் வருடத்துக்கான நலன்புரிச் சங்கத்தின் வருமானக்கூற்று

	(ரூ. ‘000)
வருமானம்	
அங்கத்துவப் பணம்	700
மோட்டார் வாகன நன்கொடை வருமானம்	350
சிற்றுண்டிச்சாலை இலாபம்	60
	1 110
செலவுகள்	
அச்சடித்தல், காகிதாதிச் செலவுகள்	(120)
மின்கட்டணம்	(30)
பெறுமானத் தேய்வு	(210)
அங்கத்துவப் பண பதிவழிப்பு	(15)
ஏனைய செலவுகள்	(40)
மிகை	**695**

3. ஆரம்ப மற்றும் இறுதி நிதிநிலைமைகள் தொடர்பான தகவல்கள்

	31.03.2025 **(ரூ. ‘000)**	31.03.2024 **(ரூ. ‘000)**
ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்	1 720	1 800
சிற்றுண்டிச்சாலை இருப்பு	80	160
பெற வேண்டிய அங்கத்துவக் கட்டணம்	27	22
காசும் காசுக்குச் சமனானவையும்	750	308
சிற்றுண்டிச்சாலைக் கடன்கொடுத்தோர்	92	160
முற்பண அங்கத்துவப் பணம்	15	5

மேலதிக தகவல்கள்:

1. காலப்பகுதியில் ஆதனம் மற்றும் உபகரணங்களின் விற்பனையோ அகற்றலோ இடம்பெறவில்லை. எனினும் சிற்றுண்டிச்சாலை உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.
2. 31.03.2024 திகதியில் நன்கொடையாகக் கிடைத்த மோட்டார் வாகனம் 10 வருடங்களுக்கு வருமானமாக சமமாகக் காட்டப்படும்.

வேண்டப்படுவது:

31.03.2025 திகதியில் முடிவடையும் வருடத்துக்கான நலன்புரிச் சங்கத்தின் பெறுவனவு கொடுப்பனவுக் கணக்கு.

(10 புள்ளிகள்)
(மொத்தம் 40 புள்ளிகள்)

* * *

கல்வி அமைச்சு

முன்னோடி வினாத்தாள் கணக்கீடு புள்ளிவழங்கும் திட்டம்

1.	(3)	2.	(4)	3.	(3)		
4.	(3)	5.	(4)	6.	(1)		
7.	(4)	8.	(4)	9.	(4)	10.	(4)
11.	(2)	12.	(5)				
13.	(2)	14.	(2)	15.	(2)	16.	(4)
17.	(2)	18.	(1)	19.	(2)		
20.	(4)	21.	(3)	22.	(1)		
23.	(2)	24.	(5)	25.	(3)	26.	(4)
27.	(4)	28.	(3)				
29.	(4)	30.	(5)				

31. A - கடன் வழங்குனர், ஏனைய கடன்கொடுத்தோர்

B - வளங்களை வழங்குதல், நிதி

32.

கொ.வா. இல.	பொறுப்புக்கள்		உரிமையாண்மை	
	அதிகரிக்கும் / குறையும்	பெறுமதி (ரூ.)	அதிகரிக்கும் / குறையும்	பெறுமதி (ரூ.)
1.	குறையும்	100 000	அதிகரிக்கும்	80 000
2.	குறையும்	50 000	குறையும்	175 000

33. ரூ. 961 000

34. ரூ. 100 000 ஆல் அதிகரிக்கும்

35. A - நிதிநிலைமைக் கூற்று B - காசுப்பாய்ச்சல் கூற்று

C - உரிமையாண்மை மாற்றல் கூற்று D - இலாபம் அல்லது நட்டம் மற்றும் முற்றுமடங்கிய வருமானக்கூற்று

36. (1) உண்மை (2) பொய் (3) உண்மை (4) உண்மை

37. A - பாதுகாப்பு B - இணைதல் C - அலகுசார் D - வெளிப்படுத்தல்

38. A. ரூ. 4 800 000 B. ரூ. 1 500 000

39. (அ) ரூ. 1 200 000 (ஆ) ரூ. 4 100 000

40. (அ) ரூ. 5 000 000 (ஆ) ரூ. 900 000

41. A. பொருத்தமான தன்மை B. பொருளாதார வளம் (சொத்து)

C. தொடர்ந்தியங்கும் D. காலந்தவறாமை

42. A. கொள்கை B. கொள்கை C. மதிப்பீட்டு D. மதிப்பீட்டு

43. a. ரூ. 1 250 000 b. 05 வருடங்கள்

c. ரூ. 62 500

44. (அ) ரூ. 1 000 000 (ஆ) ரூ. 400 000

45. A. நிகழத்தக்க பொறுப்பு - தொகை நிச்சமற்றது

B. நிகழத்தக்க சொத்து - தொகை நிச்சமற்றது

46. (1) உண்மை (2) பொய் (3) பொய் (4) பொய்

47. 1. பைக்கற்றுக்கு ரூ. 30 2. ரூ. 465

48. 1. 16 000 அலகுகள் 2. 15 500 அலகுகள்

3. 10 000 அலகுகள 4. 12 750 / 10150 அலகுகள

49. 1. 225 அலகுகள் 2. 345 அலகுகள்

50. 1. ரூ. 618 000 2. ரூ. 430 000

வினா 1

(1)

வரையறுக்கப்பட்ட திலீபன் கம்பனி
31.03.2025 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபம் அல்லது நட்டம்
மற்றும் முற்றுமடங்கிய வருமானக்கூற்று (ரூ. '000)

	குறிப்பு		
விற்பனை		74 400	செய்கை 1
விற்பனைக் கிரயம்		(34 800)	செய்கை 2
மொத்த இலாபம்		39 600	
ஏனைய வருமானம்		80	செய்கை 3
விநியோகக் கிரயம்		(14 570)	செய்கை 4
நிர்வாக செலவுகள்		(12 123)	செய்கை 5
ஏனைய செலவுகள்		(2 100)	செய்கை 6
நிதிக்கிரயம்		(1 600)	செய்கை 7
வரிக்கு முன் இலாபம்	01	9 287	
வருமான வரி		(2 150)	செய்கை 8
காலப்பகுதிக்கான இலாபம்		**7 137**	
ஏனைய முற்றுமடங்கிய வருமானம்			
காணி மீள் மதிப்பீட்டு குறை		(1 500)	
காலப்பகுதிக்கான மொத்த முற்றுமடங்கிய வருமானம்		**5 637**	

குறிப்பு – 01

வரிக்குமுன்னரான இலாபமானது பின்வரும் செலவுகளைக் கழித்தபின் கணிக்கப்பட்டுள்ளது.

	(ரூ. '000)
இயக்குனர் சம்பளம்	800
கணக்காய்வுக் கட்டணம்	500
பெறுமானத் தேய்வு	4 693
காணி மீள்மதிப்பீட்டுக் குறை	500
உத்தரவாத செலவுகள்	700
இருப்புப் பதிவழிப்பு	100
குத்தகை வட்டி	600

செய்கை 1 – **விற்பனை**

விற்பனை	88 500
VAT	(13 500)
உழைக்கப்படாத வருமானம்	(600)
	74 400

செய்கை 2 – **விற்பனைக் கிரயம்**

விற்பனைக் கிரயம்	43 000
VAT	(8 200)
	34 800

செய்கை 3 – **ஏனைய வருமானம்**

மோட்டார் விற்பனை இலாபம்	80
	80

செய்கை 4 – **வினியோகக் கிரயம்**

மீதி	14 000
அறவிடமுடியாக்கடன்	500
மோட்டார் வாகன பெறு. தேய்வு	(180)
செலுத்திய உத்தரவாதம்	(450)
உத்தரவாத செலவு	700
	14 570

செய்கை 5 – **நிர்வாக செலவு**

மீதி	13 500
உபகரண பெறுமானத் தேய்வு	(177)
சொத்து பாவனை உரிமை தேய்வு	500
செலுத்திய பங்குலாபம்	(1 800)
அட்டுறு கணக்காய்வுக் கட்டணம்	100
	12 123

செய்கை 6 – **ஏனைய செலவு**

மீதி	1 500
இருப்புப் பதிவழிப்பு	100
காணி மீள்மதிப்பு நட்டம்	500
	2 100

செய்கை 7 – **நிதிக்கிரயம்**

மீதி	1 000
குத்தகை வட்டி	600
	1 600

செய்கை 8 – **வருமானவரி**

செலுத்திய வரி	1 500
செலுத்த வேண்டியது	750
மதிப்பிடப்பட்டது	2 250
கடந்த ஆண்டு மிகை	(100)
வருமானவரி	**2 150**

(2)

வரையறுக்கப்பட்ட திலீபன் கம்பனி

31.03.2025 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று (ரூ. '000)

நடைமுறையல்லாச் சொத்துக்கள்			
ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்	02	64 007	
சொத்து பாவனை உரிமை	03	4 500	
நடைமுறைச் சொத்துக்கள்			
இருப்பு		4 700	செய்கை 9
வியாபார கடன்பட்டோர்		15 500	
காசும் காசுக்குச் சமனானவையும்		2 300	
		91 007	
உரிமையாண்மை			
கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள்		45 000	
மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்		1 500	
நிறுத்தி வைத்த வருவாய்		21 687	
நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்			
குத்தகைப் பொறுப்பு		2 710	செய்கை 10
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வியாபார கடன்கொடுத்தோர்		11 000	
குத்தகைப் பொறுப்பு		1 890	செய்கை 10
உத்தரவாதச் சான்றிதழ்		650	செய்கை 11
வருமானவரி		750	
உழைக்கப்படாத வருமானம்		600	
கணக்காய்வுக் கட்டணம்		100	
செலுத்த வேண்டிய VAT		5 120	
		91 007	

குறிப்பு 02 – ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்

கிரயம் / பெறுமதி	காணி	கட்டடம்	மோட்டார் வகனம்	காரியாலய உபகரணம்	மொத்தம்
01.04.2024 இல் மீதி	40 000	25 000	15 000	8 820	88 820
காணி மீள் மதிப்பீட்டு குறை	(2 000)				(2 000)
சேர்ப்பனவுகள்				1 000	1 000
அகற்றல்			(3 000)		(3 000)
31.03.2025 இல் மீதி	**38 000**	**25 000**	**12 000**	**9 820**	**84 820**
பெறுமானத் தேய்வு					
01.04.2024 இல் மீதி	---	8 000	7 200	2 500	18 700
காலப்பகுதிக்கான தேய்வு	---	1 250	1 620	1 323	3 193
அகற்றல்			(1 080)		(1 080)
31.03.2025 இல் மீதி	**---**	**9 250**	**7 740**	**1 823**	**20 823**
31.03.2025 தேறிய மீதி	**38 000**	**15 750**	**4 260**	**5 997**	**64 007**

சொத்து பாவனை உரிமை

கிரயம்	
01.04.2024 இல் மீதி	---
சேர்ப்பனவுகள்	5 000
31.03.2025 இல் மீதி	5 000
திரண்ட பெறுமானத் தேய்வு	
01.01.2024 இல் மீதி	---
காலப்பகுதிக்கான தேய்வு	500
31.03.2025 இல் மீதி	4 500
31.03.2025 இல் தேறிய பெறுமதி	**4 500**

செய்கை 9 – **இருப்பு**

கிரயம்	2 800
இருப்பு பதிவழிப்பு	100
	2 700

செய்கை 11 – **உத்தரவாதச் சான்றிதழ்**

01.04.2024 இல் மீதி	(400)
வருடத்தில் செலுத்தப்பட்டது	450
31.03.2024 இல் மீதி	650
உத்தரவாத செலவு	**700**

செய்கை 12 – **VAT**

விற்பனைக்கான VAT	13500
கொள்வனவுக்கான VAT	(8500)
போட்டோ பிரதி இயந்திரம்	(180)
செலுத்த வேண்டியது	

செய்கை 10 – **குத்தகைக் கடன்**

கடன் மீதி	4 000
கடன் வட்டி	600
	4 600

ந.மு.பொ. – 1 200 + (1 200 – 510) = 1 890

ந.முஅ..பொ. – 4 600 – 1 890 = 2 710

(3) **வரையறுக்கப்பட்ட திலீபன் கம்பனி**

31.03.2025 இல் முடிவடைந்த ஆண்டுக்கான உரிமையாண்மை மாற்றல்கூற்று (ரூ. '000)

	கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள்	மீள்மதிப் பீட்டு ஒதுக்கம்	நிறுத்தி வைத்த வருவாய்	மொத்தம்
01.01.2024 இல் மீதி	45 000	3 000	16 350	64 350
மொத்த முற்றுமடங்கிய வருமானம்		(1 500)	7 137	5 637
இடைக்காலப் பங்குலாபம்			(1 800)	(1 800)
31.03.2025 இல் மீதி	45 000	1 500	21 687	68 187

வினா 2

(அ) (1) 2025 மார்ச் மாதத்துக்கான சம்பளப்பட்டியல்

இ ல.	அடிப்ப. சம்பளம்	மே.நே. வேலை	வா.செ. படி	மொத்த சம்பளம்	கழிப்பனவு			மொத்த கழிப்ப.	தேறிய சம்பளம்	பங்களிப்பு	
					EPF	சங்கம்	முற் பணம்			EPF	ETF
01	80 000	15 000	20 000	115 000	8 000	2 000	50 000	60 000	55 000	12 000	2 400
02	72 000	27 000	20 000	119 000	7 200	2 000		9 200	109 800	10 800	2 160
03	64 000	6 000	20 000	90 000	6 400	2 000	25 000	33 400	56 600	9 600	1 920
	216 000	**48 000**	**60 000**	**324 000**	**21 600**	**6 000**	**75 000**	**102 600**	**221 400**	**32 400**	**6 480**

(2) 1. சம்பளக் க/கு

சம்பள கட்டுப்பாட்டு க/கு	324 000	இலாப நட்டக் க/கு	324 000
	324 000		**324 000**

2. சம்பளக் கட்டுப்பாட்டுக் க/கு

EPF	21 600	சம்பளக் க/கு	324 000
நலன்புரிச் சங்கம்	6 000		
கடன் முற்பணம்	75 000		
மீ.செ.	221 400		
	324 000		**324 000**
		மீ.வ.	221 400

3. செலுத்த வேண்டிய EPF க/கு

காசுக் க/கு	60 000	மீ.வ.	60 000
மீ.செ.	54 000	சம்பள கட்டுப்பாட்டு க/கு	21 600
		EPF செலவுக் க/கு	32 400
	114 000		**114 000**
		மீ.வ.	54000

செலுத்த வேண்டிய ETF க/கு

மீ.செ.	6 480	ETF செலவுக் க/கு	6 480
	6 480		**6 480**
		மீ.வ.	6 480

(3) மார்ச் மாத சம்பளத்துக்கான மொத்தச் செலவு

சம்பளம்	324 000
EPF பங்களிப்பு	32 400
ETF பங்களிப்பு	6 480
	362 880

(அ) (1) மேந்தலைப் பகுப்பாய்வு அட்டவணை

உருப்படி	அடிப்படை	பெறுமதி	உறிபத்தி		சேவை
			ஒன்றி - ணைத்த ல்	பொருத் - துதல்	களஞ் சியம்
மேந்தலைகள்	நேர்	690 000	450 000	240 000	-----
நேரில் பொருள்	நேர்	280 000	186 000	94 000	-----
வாடகை	பரப்பளவு	600 000	300 000	200 000	100 000
மின்சாரம்	கிலோவாற்று	450 000	180 000	150 000	120 000
இயந்திர பெறுமானத் தேய்வு	இயந்திரப் பெறுமதி	700 000	500 000	200 000	-----
சம்பளம்	நேர்	90 000	-----	-----	90 000
நேரில் கூலி	ஊழியர் எண்.	540 000	300 000	160 000	80 000
		3 350 000	**1 916 000**	**1 044 000**	**390 000**
மீள்பகிர்வு	3 : 2		234 000	156 000	(390 000)
மொத்த மேந்தலைக்கிரயம்			2 150 000	1 200 000	0

(2) மேந்தலை உறிஞ்சல் வீதம் ஒன்றிணைத்தல் **ரூ.215** பொருத்ததல் **ரூ.150**

ஒன்றிணைத்தல் **பொருத்துதல்**

மேந்தலை உறிஞ்சல் வீதம் $= \dfrac{\text{பாதிடப்பட்ட மேந்தலைக் கிரயம்}}{\text{பாதிடப்பட்ட இயந்திர மணித்தியாலம்}}$ $\quad \dfrac{\text{பாதிடப்பட்ட மேந்தலைக் கிரயம்}}{\text{பாதிடப்பட்ட இயந்திர மணித்தியாலம்}}$

$= \dfrac{2\ 150\ 000}{10\ 000}$ $\quad \dfrac{1\ 200\ 000}{8\ 000}$

= ரூ. 215 ரூ. 150

(3) அலகுக் கிரயம் **A** **B**

ரூ. 2 200 **ரூ. 1 800**

		A		B
நேர் மூலப்பொருள்		800		500
நேர் கூலி		335		370
மேந்தலைக் கிரயம்				
ஒன்றிணைத்தல்	215 X 3	645	215 X 2	430
பொருத்துதல்	150 X 2	300	150 X 3	450
உற்பத்தியல்லா மேந்தலை		120		50
		2 200		**1 800**

(4) விற்பனை விலை **A** **B**

ரூ. 2 750 **ரூ. 2 250**

A **B**

விற்பனை விலை $= \frac{2\,200}{100} \times 125$ $\qquad \frac{1\,800}{80} \times 100$

$= 2\,750$ $\qquad 2\,250$

வினா 3

(அ) (1) 1. ரூ. 200 000 பெறுமதியான மரத்தளபாடங்கள் காசுக்குக் கொள்வனவு செய்யப்பட்டது.
2. சரக்குகள் காசுக்குக் கொள்வனவு ரூ. 600 000
3. ரூ. 200 000 கிரயமான பொருட்கள் ரூ. 300 000 இற்கு கடனுக்கு விற்கப்பட்டது.
4. உட்திருப்பம் ரூ. 30 000 அதன் கிரயம் ரூ. 20 000
5. கடன்பட்டோரிடம் பெற்ற காசு ரூ. 160 000, கொடுத்த கழிவு ரூ. 10 000
6. செயற்பாட்டுச் செலவுகள் ரூ. 100 000
7. சரக்குகள் கடன் கொள்வனவு ரூ. 130 000
8. வழங்குனருக்குத் திருப்பியனுப்பிய பொருட்கள் ரூ. 30 000
9. ரூ. 200 000 பெறுமதியான கடன்கொடுத்தோருக்கு ரூ. 20 000 கழிவில் கடன் தீர்க்கப்பட்டது.
10. வங்கிக்கடன் தவணைக் கட்டணம் ரூ. 110 000 இதில் அடங்கியுள்ள வட்டி ரூ. 10 000
11. உரிமையாளரால் சொந்தப் பணத்தில் செலுத்திய செலவுகள் ரூ. 20 000
12. நன்கொடையாகக் கொடுத்த எழுதுபொருட்கள் ரூ. 50 000
13. ரூ. 300 000 கிரயமான பொருட்கள் ரூ. 450 000 இற்குக் காசுக்கு விற்கப்பட்டது.
14. மார்ச் மாத வாடகை ரூ. 40 000 முற்பண வாடகையில் பதிவழிக்கப்பட்டது.
15. மரத்தளபாடங்களுக்கான பெறுமானத் தேய்வு ரூ. 10 000

(2) அமிர்தா வியாபாரத்தின் 31.03.2025 இற்கான வருமானக்கூற்று **(ரூ. '000)**

விற்பனை (300 + 450)			750
உட்திருப்பம்			(30)
			720
விற்பனைக் கிரயம்			
ஆரம்ப இருப்ப		350	
கொள்வனவு (600 + 130)	730		
வெளித்திருப்பம்	(30)		
நன்கொடை	(50)		
பற்று	(180)	470	
		820	
இறுதி இருப்பு		(340)	480
மொத்த இலாபம்			**240**

ஏனைய வருமானம்		
பெற்ற கழிவு		20
பங்குலாபம்		250
		510
செலவுகள்		
கொடுத்த கழிவு	10	
செயற்பாட்டுச் செலவுகள்	120	
கடன்வட்டி	10	
நன்கொடை	50	
வாடகை	40	
தளபாட பெறுமானத் தேய்வு	10	
அறவிடமுடியாக்கடன்	30	
வங்கிக்கட்டணம்	15	
காப்புறுதி	160	
ஐயக்கடன் ஏற்பாடு	14	(459)
தேறிய இலாபம்		**51**

(3) 1. காசு மீதி - ரூ. 795 000
2. கடன்பட்டோர் தேறிய மீதி - ரூ. 126 000

(ஆ) (1) **நாட்குறிப்பு பதிவுகள்**

1.	இலாப நட்டக் க/கு	வரவு	12 000	
	கடன்பட்டோர் க/கு	செலவு		12 000
	(ஏடுகளில் பதியப்படாத செலவுத்தாள் ரூ. 12 000 பதியப்பட்டது)			
2.	இலாப நட்டக் க/கு	வரவு	27 000	
	தொங்கல் க/கு	செலவு		27 000
	(மின்சாரக் கணக்கில் குறைத்துப் பதிந்த ரூ. 27 000 பதியப்பட்டது)			
3.	தொங்கல் க/கு	வரவு	200 000	
	கடன்படடோர் கட்டுப்பாட்டுக் க/கு	செலவு		200 000
	(கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பிழையாக வரவு வைக்கப்பட்ட ரூ. 100 000 திருத்தப்பட்டது)			
4.	தொங்கல் க/கு	வரவு	500 000	
	தரணி க/கு	செலவு		500 000
	(தரணி கணக்கில் பிழையாக வரவில் பதியப்பட்ட ரூ. 250 000 திருத்தப்பட்டது)			
5.	தொங்கல் க/கு	வரவு	160 000	
	இலாபநட்டக் க/கு	செலவு		160 000
	(பெற்ற தரகுக் கணக்கில் பிழையாக வரவில் பதியப்பட்டது ரூ. 80 000 திருத்தப்பட்டது)			
6.	உபகரணக் க/கு	வரவு	200 000	
	இலாபநட்டக் க/கு	செலவு		200 000
	(கொள்வனவுக் கணக்கில் பதியப்பட்ட உபகரணங்கள் ரூ. 200 000 திருத்தப்பட்டது)			
	இலாபநட்டக் க/கு	வரவு	6 000	
	உபகரண தேய்வு ஏற்பாட்டுக் க/கு	செலவு		6 000
	(உபகரண தேய்வு ரூ. 6 000 கணக்குகளில் பதியப்பட்டது)			

(2) **இலாப சீராக்கல்கூற்று**

சீராக்க முன் தேறிய இலாபம்	485 000
பெற்ற தரகு	160 000
உபகரணம்	200 000
உட்திருப்பம்	(12 000)
மின்கட்டணம்	(27 000)
உபகரண பெறுமானத் தேய்வு	(6 000)
திருத்திய தேறிய இலாபம்	**800 000**

வினா 4

(அ) (1) கொள்வனவு நாளேடு **(ரூ. '000)**

திகதி	விபரம்	பெறுமதி	VAT	மொத்தம்
	பரத் ரேடர்ஸ்	50	9	59
	லியோ ரேடர்ஸ்	150	27	177
	சீலன் ரேடர்ஸ்	250	45	295
	மொத்தம்	**450**	**81**	**531**

(2) விற்பனை நாளேடு **(ரூ. '000)**

திகதி	விபரம்	பெறுமதி	VAT	மொத்தம்
	விமல் ரேடர்ஸ்	100	18	118
	கமல் ரேடர்ஸ்	200	36	236
	மொத்தம்	**300**	**54**	**354**

(3) காசுப் பெறுவனவு நாளேடு **(ரூ. '000)**

திகதி	விபரம்	கழிவு	பெறுமதி	பகுப்பாய்வு		
				விற்பனை	கடன் பட்டோர்	VAT
	விமல் ரேடர்ஸ்	10	150		150	
	நிமல் ரேடர்ஸ்	5	45		45	
	கமல் ரேடர்ஸ்		200		200	
	விற்பனை		1 416	1 200		216
	மொத்தம்	**15**	**1 811**	**1 200**	**395**	**216**

(4) காசுக் கொடுப்பனவு நாளேடு **(ரூ. '000)**

திகதி	விபரம்	கழிவு	பெறு மதி	பகுப்பாய்வு				
				கொள் வனவு	கடன் கொடுத் தோர்	செல வுகள்	ஏனை யவை	VAT
	பரத் ரேடர்ஸ்		60		60			
	லியோ ரேடர்ஸ்	20	120		120			
	சீலன் ரேடர்ஸ்	10	200		200			
	கொள்வனவு		590	500				90
	இயந்திரம்		236				200	36
	செலவுகள்		59			50	9	
	மொத்தம்	**30**	**1 265**	**500**	**380**	**50**	**209**	**126**

(5) காசுக் க/கு **(ரூ. '000)**

மீ.வ.	75	கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு	380
கடன்பட்டோர் கட்டுப்பாட்டு	395	கொள்வனவு	500
விற்பனை	1 200	செலவுகள்	50
VAT கட்டுப்பாட்டு	216	ஏனையவை	209
		VAT கட்டுப்பாட்டு	126
		மீ.செ.	621
	1 886		**1 886**

கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் க/கு **(ரூ. '000)**

மீ.வ.	350	காசு	395
விற்பனை	300	கொடுத்த கழிவு	15
VAT	54	மீ.செ.	294
	704		**704**

கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் க/கு **(ரூ. '000)**

காசு	380	மீ.வ.	750
பெற்ற கழிவு	30	கொள்வனவு	450
மீ.செ.	871	VAT	81
	1 281		**1 281**

VAT கட்டுப்பாட்டுக் க/கு **(ரூ. '000)**

காசு	135	மீ.வ.	45
கடடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு	81	காசு	216
மீ.செ.	99	கடன்பட்டோர் கட்டுப்பாட்டு	54
	315		**315**

(ஆ) (1) காசுப்பாய்ச்சல் அட்டவணை **(ரூ. '000)**

வருடம்	0	1	2	3	4	5
கிரயம்	(2 000)					
எஞ்சிய பெறுமதி						50
பரிசீலனை, ஆலோசனை	(100)					
போக்குவரத்து, தாபித்தல்	(300)					
தொழிற்படு மூலதனம்	(400)					400
விற்பனை		500	500	500	500	500
செயற்பாட்டு செலவுகள்		200	200	200	200	200
தேறிய காசுப் பாய்ச்சல்	**(2 800)**	**700**	**700**	**700**	**700**	**1 150**

தேறிய நிகம்காலப் பெறுமதி **(ரூ. '000)**

வருடம்	0	1	2	3	4	5
தேறிய காசுப் பாய்ச்சல்	(2 800)	700	700	700	700	1 150
கழிவீட்டுக் காரணி	1	0.91	0.83	0.75	0.68	0.62
	(2 800)	637	581	525	476	713

தேறிய நிகழ்காலப் பெறுமதி (2 932 – 2 800) = 132

(3) தேறிய நிகழ்காலப் பெறுமதி எதிர் கணியம் என்பதால் இச்செயற்றிட்டத்தை மேற்கொள்ளவது பொருத்தமானது.

(இ) (1) காசுக் கணக்கு **(ரூ. '000)**

மீ.வ.	100	கொள்வனவு	150
விற்பனை	250	கடன்கொடுத்தோர்	80
கடன்பட்டோர்	50	செலவுகள்	15
		மீ.செ.	155
	400		**400**

திருத்திய காசுக் கணக்கு **(ரூ. '000)**

மீ.வ.	155	வங்கிக் கட்டணம்	5
		வங்கிக்கடன்	20
		மீ.செ.	130
	155		**155**

(2) 2025 ஏப்ரல் மாதத்துக்கான வங்கிகணக்கிணக்கக்கூற்று **(ரூ. '000)**

திருத்திய காசுக் கணக்கு மீதி	130
சமர்ப்பிக்கப்படாத காசோலை	20
வசூலிக்கப்படாத காசோலை	(15)
வங்கிக்கூற்று மீதி	**135**

வினா 5

(அ) (1) அமாயா, நிமல் மற்றும் விஸ்மி பங்குடமை வியாபாரம்
31.03.2025 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக்கூற்று
(பகிர்வுகள் உட்பட) **(ரூ. '000)**

விற்பனைகள்		10 500
விற்பனைக் கிரயம் (6200 – 300 + 30)		(5 930)
மொத்த இலாபம்		**4 570**
ஏனைய வருமானம்		
கட்டட வாடகை		80
செயற்பாட்டு செலவுகள் (2010 + 100 + 80)		(2 190)
கடன் வட்டி (40 + 20)		(60)
தேறிய இலாபம்		**2 400**
மூலதன வட்டி - அமாயா	480	
- நிமல்	420	(900)
பங்காளர் சம்பளம் - விஸ்மி		(600)
இலாபம் - அமாயா	360	
- நிமல்	360	
- விஸ்மி	180	(900)
		0

____(2) அமாயா, நிமல் மற்றும் விஸ்மி பங்குடமை வியாபாரம்

பங்காளர் மூலதனக் கணக்குகள் **(ரூ. '000)**

விபரம்	அமா.	நிமல்	விஸ்மி	விபரம்	அமா.	நிமல்	விஸ்மி
பங்காளர்	720	720	360	மீ.வ.	8 000	7 000	
மீ.செ.	8 180	7 680	5 640	காசு			5 000
				மூலப்பொருள்			1 000
				விஸ்மி	900	900	
				கடன்		500	
	8 900	**8 400**	**6 000**		**8 900**	**8 400**	**6 000**
				மீ.வ.	8 180	7 680	5 640

அமாயா, நிமல் மற்றும் விஸ்மி பங்குடமை வியாபாரம்

பங்காளர் நடைமுறைக் கணக்குகள் **(ரூ. '000)**

விபரம்	அமா.	நிமல்	விஸ்மி	விபரம்	அமா.	நிமல்	விஸ்மி
மீ.வ.	300			மீ.வ.		900	
சம்பளம்			300	மூலதன வட்டி	480	420	360
பற்று	120	120		சம்பளம்			600
வாடகை			80	இலாபம்	360	360	180
மீ.செ.	520	1 580	760	கடன் வட்டி		20	
				விற்பனை ஊழி. சம்பளம்	100		
	940	**1 700**	**1 140**		**940**	**1 556**	**1 140**
				மீ.வ.	520	1 580	760

(ஆ) (1) 2000 – 200 = ரூ. **1 800**

(2) மொத்த நிலையான கிரயம் = **234 000**

படகுக் கட்டணம் (38 000 X 4)	152 000
எரிபொருள் (17 000 X 4)	68 000
விளம்பரம்	10 000
பாதுகாப்பு ஜக்கட்டுகள்	4 000
	234 000

(3) சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை = **130**

$$\text{சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை} = \frac{234\ 000}{1\ 800}$$

$$= 130$$

(4) சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை = **50**

$$\text{சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை} = \frac{234\ 000 + 90\ 000}{1\ 800}$$

$$= 180$$

$$= 180 - 130$$

அல்லது = **50**

சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை $= \frac{90\ 000}{1\ 800}$

$= \mathbf{50}$

(5) அறவிட வேண்டிய கட்டணம் = **ரூ. 2 320**

அறவிட வேண்டிய கட்டணம் $= \frac{234\ 000 + 10\ 000 + 180\ 000}{(x - 200)}$

= **ரூ. 2 320**

வினா 6

திலீபன் பொதுக்கம்பனி

31.03.2025 இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல்கூற்று **(ரூ. '000)**

செயற்பாட்டு நடவடிக்கை		
கடன்பட்டோரிடமிருந்து கிடைத்த காசு	25 050	செய்கை 1
கடன்கொடுத்தோர் மற்றும் சம்பளமாகக் கொடுத்த காசு	(22 735)	செய்கை 2
	2 315	
கடன் வட்டி	(500)	
வருமானவரி	(1 860)	செய்கை 3
செயற்பாட்டு நடவடிக்கை மூலம் பயன்படுத்திய காசு	(45)	
முதலீட்டு நடவடிக்கை		
தளபாடம் மற்றும் உபகரண கொள்வனவு	(7 500)	
உபகரண விற்பனையால் பெற்ற காசு	7 950	செய்கை 4
முதலீட்டு நடவடிக்கை மூலம் உருவான காசு	450	
நிதி நடவடிக்கை		
பங்கு வழங்கல்	6 000	
பங்குலாபம் செலுத்தியது	(2 500)	செய்கை 5
கடன் திருப்பிச் செலுத்தியது	(2 000)	
நிதி நடவடிக்கை மூலம் உருவான காசு	1 500	
காலப்பகுதியில் தேறிய காசு அதிகரிப்பு	1 905	
01.04.2024 இல் காசும் காசுக்குச் சமனானவையும்	520	
31.03.2025 இல் காசும் காசுக்குச் சமனானவையும்	2 425	

செய்கை 1

வியாபார வருமதிகள்	**(ரூ. '000)**
01.04.2024 இல் மீதி	1 220
கடன் விற்பனை	6 500
கொடுத்த கழிவு	(290)
31.03.2025 இல் மீதி	(1 880)
கிடைத்த காசு	5 550
காசு விற்பனை	19 500
மொத்தம்	25 050

செய்கை 2

வியாபார சென்மதிகள்	**(ரூ. '000)**
01.04.2024 இல் மீதி	1 080
கடன் கொள்வனவு	7 800
கிடைத்த கழிவு	(330)
31.03.2025 இல் மீதி	(1 975)
காசுக் கொள்வனவு	11 700
செலவுகள்	
01.04.2024 அட்டுறு	960

செய்கை 3		**(ரூ. '000)**
	வருமானவரி	
	01.04.2024 இல் மீதி	740
	வருமானவரிச் செலவு	1 950
	31.03.2025 இல் மீதி	(830)
	காசாகச் செலுத்தியது	1 860

வருடத்துக்கான செலவு (பெறுமானத் தேய்வு நீக்கி)	5 100
31.03.2025 இல் அட்டுறு	(1 600)
மொத்தம்	22 735

செய்கை 4

ஆதனம் பொறி மற்றும் உபகரணம் **(ரூ. '000)**

01.04.2024 இல் மீதி	18 300
சேர்த்தல்	7 500
மீள்மதிப்பு	8 000
பெறுமானத் தேயவு	(3 400)
31.03.2025 இல் மீதி	(22 500)
விற்பனை - தேறிய பெறுமதி	7 900
இலாபம்	50
பெற்ற காசு	7950

செய்கை 5

நிறுத்தி வைத்த வருவாய் **(ரூ. '000)**

01.04.2024 இல் மீதி	2 100
காலப்பகுதிக்கான இலாபம் (12 600 – 8 000)	4 600
மூலதனமாக்கல்	(4 000)
31.03.2025 இல் மீதி	(200)
பங்குலாபம்	2 500

(ஆ) (1) 1. ரூ. 6 000 000
2. ரூ. 2 000 000
3. ரூ. 1 900 000
4. ரூ. 7 995 000
5. ரூ. 18 000 000

(2) 1. பின்னடைவு
2. முன்னேற்றம்
3. முன்னேற்றம்
4. முன்னேற்றம்
5. பின்னடைவு

(இ) பெறுவனவு கொடுப்பனவுக் கணக்கு **(ரூ. '000)**

மீ.வ.	308	சிற்றுண்டிச்சாலை உபகரணம்	210	செய்கை 1
சிற்று.சாலை விற்பனை	1 820	சிற்று.சாலை கடன்கொடுத்தோர்	888	செய்கை 2
அங்கத்துவப் பணம்	690	மின்கட்டணம் (130 + 30)	160	
		சிற்று.சாலை சம்பளம்	600	
		சிற்று.சாலை ஏனைய செலவு	50	
		அச்சடித்தல், எழுதுபொருள்	120	
		ஏனைய செலவுகள்	40	
		மீ.செ.	750	
	2 818		**2 818**	

செய்கை 1

ஆதனம் பொறி மற்றும் உபகரணம்	**(ரூ. '000)**
31.03.2025 இல் மீதி	1 720
பெறுமானத் தேய்வு (80 + 210)	290
01.04.2024 இல் மீதி	(1 800)
கொள்வனவு	210

செய்கை 2

செயற்பாட்டு செலவுகள்	**(ரூ. '000)**
விற்பனைக் கிரயம்	900
31.03.2025 இல் இருப்பு	80
01.04.2024 இல் இருப்பு	(160)
கொள்வனவு	820
01.04.2024 இல் கடன்கொடுத்தோர்	160
31.03.2025 இல் கடன்கொடுத்தோர்	(92)
கடன்கொடுத்தோருக்குச் செலுத்தியது	888

அங்கத்துவப் பணக் கணக்கு **(ரூ. '000)**

மீ.வ.	22	மீ.வ.	5
வருமான செலவுக் க/கு	700	காசு	690
மீ.செ.	15	பதிவழித்தது	15
		மீ.செ.	27
	737		**737**